

# தொழில் நடத்தை & நன்னெறிக்கான கோட்பாடு

நடந்துகொள்ளும் விதத்துக்கான நமது தரநிலையும் எதிர்பார்ப்புகளும்

GENTHERM



# தலைவர் & CEO பில் பிரெஸ்லீ, தெரிவிக்கும் ஒரு செய்தி

Gentherm இன் வெற்றியானது கண்ணியம், மரியாதை, பொறுப்பேற்றுக்கொள்ளுதல் ஆகிய அடித்தளங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டது. நமது நடத்தை மற்றும் நன்னெறிக்கான கோட்பாடு ஒரு நிறுவனமாக நாம் யார் என்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இங்கே நாம் மிக உயரிய நன்னெறியுடனும் கண்ணியத்துடனும் செயல்பட அர்ப்பணித்துள்ளோம்.

நமது நடத்தைக் கோட்பாடு, ஒரு வழிகாட்டும் கட்டமைப்பாகச் செயல்படுகிறது. இது நமது முக்கிய மதிப்பீடுகளையும், நன்னெறி சார்ந்த தொழில் நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில் நமது அர்ப்பணிப்பையும் நமது செயல்பாடுகள் பிரதிபலிப்பதை உறுதி செய்கின்றன. இந்தக் கோட்பாடு, ஒரு நிறுவனமாக நமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதுடன், நாம் எப்போதும் கண்ணியத்துடன் செயல்படவும், சரியானதையே செய்யவும் வழிகாட்டும் முக்கியக் கொள்கைகளை வலியுறுத்துகிறது.

நமது நற்பெயரைப் பாதுகாக்கவும் Gentherm இன் தொடர் வெற்றிக்குப் பங்களிக்கவும், நமது நடத்தைக் கோட்பாடைப் படித்து, புரிந்துகொண்டு, அதன் மதிப்பீடுகளின்படி வாழ்வதற்கு நாம் அனைவரும் நேரம் எடுத்துக்கொள்வது அவசியம். ஒவ்வொரு ஊழியரும் நமது நடத்தைக் கோட்பாடைப் படித்து அதில் இருப்பவற்றையும் அவை நம் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஊக்கப்படுத்துகிறேன். அனைத்துச் சட்டங்களுக்கும் இணங்கி நடப்பது முக்கியம், அதோடு நமது குழுக்கள் தங்கள் மனசாட்சியின்படியும் உத்வேகத்துடனும் செயல்படுவதும் முக்கியம். நமது நடத்தைக் கோட்பாடைப் பின்பற்றுவதன் மூலம் நாம் அனைவரும் பெருமைப்படும் விதத்தில் நமது தொழிலை நாம் நடத்த முடியும்.

உடன் பணியாற்றுபவர்கள், வாடிக்கையாளர்கள், கூட்டாளிகள், மற்றும் நாம் சேவை செய்யும் சமுதாயங்களுடன் நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதைக் குறித்த தெளிவான எதிர்பார்ப்புகளை இந்த ஆவணம் வழங்குகிறது. இது விதிகளின் ஒரு தொகுப்பு மட்டுமே அல்ல, மாறாக ஒரு நிறுவனமாக நாம் யார் என்பதன் பிரதிபலிப்பாக இருக்கிறது. கோட்பாடை வாசித்து அதன்படி நடக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.



தலைவர் & CEO, பில் பிரெஸ்லீ



01

# நமது நடத்தைக் கோட்பாடைக் கடைப்பிடிக்க நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம்

நம்முடன் தொழில் செய்யும் நமது ஊழியர்கள், நமது தொழில் கூட்டாளர்கள் மற்றும் பிற தனிநபர்கள் அனைவரும் நடந்துகொள்ள வேண்டிய விதம் என நாங்கள் எதிர்பார்ப்பவற்றின் தரநிலைகளை இந்தக் கோட்பாடு அமைக்கிறது. தொழிலை நன்னெறியோடும் கண்ணியத்தோடும் செய்வது நமது வெற்றிக்கும் நமது பணியை நிறைவேற்றுவதற்கும் அடித்தளம் என்பதால் இந்தக் கோட்பாடை நாங்கள் வடிவமைத்து உள்ளோம். உங்கள் செயல்பாடுகளுக்கும் தீர்மானங்களுக்கும் நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டியவர்களாகவும் பொறுப்பானவர்களாகவும் இருப்பீர்கள். Gentherm இல், நமது வாடிக்கையாளர்களுக்கு, நமது ஊழியர்களுக்கு, நமது சமூகங்களுக்கு மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் எது சரியானதோ அதைச் செய்வதன் மூலம் நமது மதிப்பீடுகளுக்கும் நமது நம்பிக்கைகளுக்கும் ஏற்ப வாழ்கிறோம்.

இந்தக் கோட்பாடு, Gentherm Incorporated (மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து இணை நிறுவனங்கள் அல்லது துணை நிறுவனங்கள் உட்பட, சூழலுக்கு ஏற்ப "Gentherm" அல்லது "நிறுவனம்" எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தில் அனைத்து நிலைகளிலும் உள்ள ஊழியர்கள் மற்றும் இயக்குநர்கள் என ஒவ்வொருவருக்கும் அவர்களின் Gentherm தொடர்பான செயல்பாடுகளுக்குப் பொருந்தும். பதவி எதுவாக இருந்தாலும், நன்னெறி மற்றும் கண்ணியம் என வரும்போது நாம் அனைவருமே தலைவர்கள் தான் மற்றும் நாம் இந்தக் கோட்பாடில் குறிப்பிட்டுள்ள அர்ப்பணிப்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், நமது ஊழியர்கள் அனைத்து ஒப்பந்ததாரர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், மற்றும் Gentherm உடன் அல்லது அதன் சார்பாகத் தொழில் செய்யும் பிற தனிநபர்கள் அல்லது அமைப்புகளை (“தொழில் கூட்டாளர்கள்”) உயரிய நெறிமுறைத் தரநிலைகளின் அடிப்படையில் நடத்துவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஒரு குழுவின் உறுப்பினர்களாக, கணக்கு கொடுக்க வேண்டியவர்களாகவும் பொறுப்பானவர்களாகவும் இருப்பது என்பது நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பங்கினைச் செய்ய வேண்டும் என்பதாகும், அவற்றுள் அடங்குவன:

- **இந்தக் கோட்பாடைப் படித்துப் புரிந்துகொள்ளுங்கள்:** வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இந்தக் கோட்பாடைப் பாருங்கள். முடிவுகளை எடுக்கவும் உங்கள் செயல்பாடுகளை வழிநடத்தவும் இதைப் பயன்படுத்துங்கள். ஊழியர்கள் இந்தக் கோட்பாடு முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய ஆதரவுக் கொள்கைகளையும் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

- **பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புரிந்துகொள்ளுங்கள்:** ஓர் உலகளாவிய நிறுவனமாக, நமது தொழிலுக்குப் பொருந்தக்கூடிய பல சிக்கலான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் உள்ளன, மேலும் இவை காலப்போக்கில் குறிப்பிடத்தக்க வழிகளில் மாறக்கூடும். உங்கள் தொழில் சார்ந்த பகுதிகளில் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பற்றிக் கேள்விகளைக் கேளுங்கள்.

- **நன்னெறியுடனும் கண்ணியத்துடனும் செயல்படுங்கள்:** எப்போதும் இந்தக் கோட்பாடிலும் இதர கொள்கைகளிலும் நாம் நிறுவியுள்ள நன்னெறி மற்றும் கொள்கைகளுடன் ஒத்துப்போகும் முடிவுகளையே எடுங்கள். நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நமது நம்பிக்கைகளை வலுப்படுத்துவதற்கும், நாம் ஒவ்வொரு முறையும் சரியான வழியில் தொழில் செய்வதை உறுதிப்படுத்துவதற்குமான ஒரு வாய்ப்பாகும்.

- **தகுந்த ஒத்துழைப்பைத் தாருங்கள்:** இது நிறுவனத்தினுள் செய்யப்படும் ஒரு செயல்முறை, ஒரு வாடிக்கையாளரின் தணிக்கை, ஓர் அரசாங்க விசாரணை அல்லது வேறு ஏதேனும் விசாரணைச் செயல்முறையின் ஒரு பகுதியாக இருந்தாலும், தகுந்த முறையில் ஒத்துழைப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள் மற்றும் தெரிந்தே மற்றும் தீங்கு செய்யும் நோக்கத்துடன் தவறான தகவல்களை வழங்க வேண்டாம்.

- **கேள்விகளைக் கேளுங்கள் மற்றும் சந்தேகங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்:** இந்தக் கோட்பாடால் எழக்கூடிய ஒவ்வொரு கவலை அல்லது சந்தேகத்துக்கும் தீர்வு அளிக்க முடியாது. ஆகையால், கேள்விகளைக் கேட்கும் துணிச்சல் மற்றும் சந்தேகங்களைத் தெரிவிப்பது ஒரு நெறிமுறை சார்ந்த கலாச்சாரத்தின் இன்றியமையாத பகுதியாகும்.

Gentherm க்குள், நமது தலைவர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்குக் கூடுதல் நடத்தைத் தரநிலைகளை நாங்கள் வழங்குகிறோம், அவற்றுள் அடங்குவன:

- **சிறந்த நடத்தைக்கு முன்மாதிரியாக இருங்கள்:** உங்கள் குழுவிற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்க எப்போதும் பணியாற்றுங்கள். இங்கு விவரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகளின்படி வாழுங்கள் மற்றும் உங்கள் செயல்பாடுகளின் மூலம் உங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துங்கள்.
- **ஊழியர்களுக்குச் செவிசாய்த்து வழிகாட்டுதலை வழங்குங்கள்:** உதவி அல்லது வழிகாட்டுதலுக்காக உங்களிடம் வருபவர்களின் குறைகள் அல்லது கேள்விகளைக் கவனித்துக் கேளுங்கள், மேலும் நேரடிக் கருத்துகளை வழங்குங்கள் அல்லது பிற தலைவர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுடன் தொடர்ந்து கேள்வி கேளுங்கள். ஒருவருக்குத் தெளிவாகத் தெரியும் ஒரு கேள்வி மற்றவருக்கு அவ்வளவு தெளிவாகத் தெரியாமல் இருக்கலாம்.
- **நேர்மறையான மற்றும் நன்னெறி சார்ந்த கலாச்சாரத்தை உருவாக்குங்கள்:** உங்கள் குழுவினர் இந்தக் கோட்பாடைப் படிப்பார்கள் என்கிற எதிர்பார்ப்பை உருவாக்குங்கள், மேலும் அதில் இடம்பெறுபவற்றைப் பற்றி அவர்களுடன் பேசுங்கள். கண்ணியத்துடன் செயல்படுவது என்றால் என்ன என்பதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பழிவாங்குதலுக்கு எதிராக நில்லுங்கள்: ஒரு தலைவராக, கேள்விகளைக் கேட்பவர்கள், குறைகளைத் தெரிவிப்பவர்கள் அல்லது பிரச்சனைகளைப் பற்றிப் பேசுபவர்களுக்கு எதிராக எந்த விதமான பழிவாங்குதலையும் நீங்கள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.
- குரல் எழுப்புங்கள் மற்றும் கேள்விகளைக் கேளுங்கள்: ஒரு சிக்கலை எழுப்ப வேண்டியிருக்கும்போது குரல் எழுப்புங்கள் மற்றும் நமது கொள்கைகளுக்கு முரணான நடத்தையை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாதீர்கள்.

### உதவிக் குறிப்புகள்

நெறிமுறைகள் குறித்த தெளிவற்ற கேள்வி அடங்கிய ஒரு முடிவை எடுக்க வேண்டிய சூழல் ஏற்படும்போது, உங்களிடமே சில கேள்விகளைக் கேட்டு ஆராயத் தொடங்குங்கள்:

- நான் சரியான அடி எடுத்து வைக்கிறேன் என்னும் 'உணர்வு' நான் திட்டமிட்ட முடிவில் உள்ளதா?
- எனது முடிவு இந்தக் கோட்பாடு மற்றும் நமது கொள்கைகளுடன் ஒத்துப்போகிறதா?
- இந்த முடிவு Gentherm, நமது வாடிக்கையாளர்கள் மற்றும் நமது பிற பங்குதாரர்களுக்குச் சரியான ஒன்றா?
- எனது மேற்பார்வையாளர் அல்லது எனது குழுவிற்கு இந்த முடிவு தெரிந்தால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்களா?
- இந்த முடிவைப் பற்றிக் கேட்கப்பட்டால் அதற்கான பொறுப்பை ஏற்க நான் தயாராக இருக்கிறேனா?

– மேலே உள்ள கேள்விகளுக்கு நீங்கள் "ஆம்" என்று பதிலளித்திருந்தால், நீங்கள் அநேகமாகச் சரியான பாதையில் இருக்கிறீர்கள்.

– நீங்கள் தயங்கினாலோ அல்லது "இருக்கலாம்" என்று பதிலளித்தாலோ, வழிகாட்டுதலுக்காக உங்கள் மேற்பார்வையாளர் அல்லது ஒரு மனிதவளப் பிரதிநிதியிடம் பேசுவதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

– இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றிற்கு நீங்கள் "இல்லை" என்று பதிலளித்திருந்தால், உங்கள் முடிவு இந்தக் கோட்பாடுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம். உங்கள் மேற்பார்வையாளர் அல்லது தகுந்த பிற நபர்களிடம் உதவி பெறுங்கள்.

நெறிமுறைகளைத் தனிநபர்கள் பின்பற்றாத சூழல்கள் அல்லது மேற்பார்வையாளர்களின் எந்த ஒரு வழிகாட்டுதலையும் புறக்கணிக்கிறார்கள் போன்ற சந்தர்ப்பங்களில் கவனமாக இருங்கள். இவ்வாறு நடந்துகொள்வதை அறிவுறுத்தும் சில வசனங்களில் இவை அடங்கும்:

- "வேலையை முடிக்க நாம் என்ன வேண்டுமானாலும் செய்துதான் ஆகவேண்டும்."
- "இங்கு இப்படித் தான் தொழில் செய்ய முடியும்."
- "இது ஒன்னும் பெரிய விஷயமில்லை - யாருக்கும் தெரியவும் தெரியாது, தெரிஞ்சாலும் கண்டுக்க மாட்டாங்க."
- "நாங்க எப்பவுமே இப்படித் தான் செய்வோம்!"
- "இந்த ஒரு முறை தான் பண்ணப்போறோம், கவலைப்படாதே."
- "வேறு ஒரு நிறுவனத்தில் எனக்கு ஒருவரைத் தெரியும், அவங்களும் இதையே தான் செய்றாங்க."

இவை அல்லது இவற்றைப் போன்ற பிற வசனங்கள் அவர்கள் இந்தக் கோட்பாடுக்கு இணங்காமல் இருக்கலாம் என்பதை அறிவுறுத்தும். அப்படியானால், நிதானித்து, அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிக்க வேண்டும். உங்கள் மேற்பார்வையாளர், மனிதவளப் பிரதிநிதி அல்லது நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரைத் தொடர்புகொண்டு மேலும் உதவி அல்லது ஆதரவைப் பெறுதலும் இதில் அடங்கும்.

நீங்கள் செய்ய வேண்டியதை யோசிக்கும்போது, நமது கோட்பாடைக் கடைப்பிடிக்காமல் இருப்பதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடாது என்பதை நினைவில்கொள்ளுங்கள். இந்தக் கோட்பாடைக் கடைப்பிடிக்காமல் இருந்தால், பொருத்தமான சட்டங்களுக்கு இணங்கி, பணிநீக்கம் வரையிலும் மற்றும் அதோடு வேறு தண்டனைகளும் இடம்பெறக்கூடிய ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாகலாம்.

### நீங்கள் என்ன செய்வீர்கள்?

கேள்வி: ஒரு குழுக் கூட்டத்தில் இந்தக் கோட்பாடைப் பற்றிப் பேசும்போது, உங்கள் சக ஊழியர்களில் ஒருவர், "நான் அதையெல்லாம் படிப்பதில்லை, அவையெல்லாம் ஒன்றுதான், யார்தான் இதைப் பற்றிக் கவலைப்படப் போகிறார்கள்" என்று கூறுகிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: இந்தக் கோட்பாடின் பல பகுதிகள் பொது அறிவாக இருந்தாலும், இந்தத் தலைப்பு குறித்த Gentherm இன் அர்ப்பணிப்பையும், சிக்கல்கள் மற்றும் கேள்விகளை எவ்வாறு கையாள்வது என்பதைப் புரிந்துகொள்ளவும், நன்னெறி மற்றும் கண்ணியம் குறித்த நமது நிலைப்பாட்டை வலுப்படுத்தவும் இந்தக் கோட்பாடைப் படிப்பது முக்கியம். தொழில் உலகம் என்பது ஒரு நுட்பமான சூழலமைப்பு, நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுபவை எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும், எனவே அந்த நுட்பங்களை நீங்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்த Gentherm இன் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொள்வது அவசியம். கோட்பாடை முக்கியமற்றதாகக் கருதும் ஓர் ஊழியரை நீங்கள் சந்தித்தால், அந்த ஆவணத்தைப் படிக்க அவர்களை ஊக்குவிக்கவும் அல்லது இந்தச் சிக்கலை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து உங்கள் மேற்பார்வையாளரிடம் பேசவும்.



02

# சிக்கல்களைக் கேட்டு, தீர்த்துவைக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்

இந்தக் கோட்பாடு, பிற கொள்கைகள் அல்லது பொருந்தக்கூடிய சட்டங்களுடன் ஒத்துப்போகாத விஷயங்களை நீங்கள் காணும்போது நடவடிக்கை எடுப்பதே Gentherm இன் நன்னெறி மற்றும் கண்ணியத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும். ஏதேனும் தவறான நடத்தையை நீங்கள் அறிந்தாலோ அல்லது சந்தேகித்தாலோ குரல் கொடுப்பது உட்பட, நமது கலாச்சாரத்தைக் கட்டமைப்பதிலும் பாதுகாப்பதிலும் Gentherm குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

### இந்தக் கோட்பாடின் மீறல்கள் அல்லது சந்தேகிக்கப்படும் மீறல்களைப் புகாரளித்தல்

சிக்கல்கள் அல்லது குறைகளைப் புகாரளிக்க பல்வேறு முறைகள் உள்ளன:

- உங்கள் மேற்பார்வையாளரிடம் பேசுங்கள்: ஊழியர்கள் ஒரு குறையை நேரடியாகத் தங்கள் மேற்பார்வையாளரிடம் புகாரளிக்கலாம். மேற்பார்வையாளர் அந்தச் சிக்கலைத் தீர்க்க உதவுவார் அல்லது கிடைக்கக்கூடிய பிற ஆதாரங்களைப் பற்றிய வழிகாட்டுதலை வழங்குவார்.

- நிறுவனத்தில் உள்ள பிற அதிகாரிகளிடம் புகாரளிக்கவும்: உங்கள் மேற்பார்வையாளரிடம் நேரடியாகப் புகாரளிக்க உங்களுக்குத் தயக்கம் இருந்தால், மனிதவளத் துறை, Gentherm இன் சட்டம் மற்றும் இணக்கத் துறை ("சட்டம் மற்றும் இணக்கத் துறை") மற்றும் நிறுவனத்தினுள் இருக்கும் பிற தலைமை மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் போன்ற பிற Gentherm துறைகளை நீங்கள் அணுகலாம் அல்லது சிக்கல்களைப் புகாரளிக்க ஆண்டுதோறும் நடத்தப்படும் கருத்து முரண்பாடு மற்றும் நன்னெறி மதிப்பீட்டுக் கருத்தாய்வு போன்ற நிறுவனத்தினுள் நடத்தப்படும் செயல்முறைகளைப் பயன்படுத்தலாம்.

- நிறுவன மின்னஞ்சல் வழியாகப் புகாரளிக்கவும்: சட்டம் மற்றும் இணக்கத் துறையின் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமும் நீங்கள் சிக்கல்களை நேரடியாகப் புகாரளிக்கலாம்: Compliance@gentherm.com.

- நன்னெறித்துறையின் அவசர உதவி எண் வழியாகப் புகாரளிக்கவும்: இணையம் அல்லது தொலைபேசி வழியாகத் தனிநபர்கள் சிக்கல்களைப் புகாரளிக்கக்கூடிய வெளிப்புற, அடையாளம் மறைத்த அவசர உதவி எண்ணை ("நன்னெறித்துறையின் அவசர உதவி எண்") Gentherm பராமரிக்கிறது. இந்தச் சேவைகள் பல்வேறு மொழிகளில் வழங்கப்படுகின்றன மற்றும் கட்டணமின்றி நாள்தோறும் 24 மணிநேரமும், வாரத்தின் 7 நாட்களிலும் கிடைக்கின்றன. இணையவழியில் புகாரளித்தல் மற்றும் உள் தொலைபேசி எண்கள் உள்ளிட்ட தொடர்புத் தகவல்களுக்கு, இங்கே கிளிக் செய்யவும்.



### என் குறைகளைப் புகாரளிக்க சிறந்த முறை எது?

வெவ்வேறு சிக்கல்கள் வெவ்வேறு வழிகளில் சிறப்பாகத் தீர்க்கப்படலாம். இதில் அடங்கும் சில உதாரணங்கள்:

**உதாரணம் 1:** உடன் பணியாற்றுபவர் என்னிடம் அடிக்கடி முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார் மற்றும் எப்போதும் மனதைப் பாதிக்கும் விஷயங்களைப் பேசுகிறார். எங்களுக்குள் ஒத்துப்போவதே இல்லை, அவர் தகாத முறையில் நடந்துகொள்வதாக நான் உணர்கிறேன்.

- இது ஒரு நிறுவனத்தினுள் நடைபெறும், தனிநபர்களுக்கு இடையிலான சிக்கலாகத் தோன்றுகிறது, எனவே உங்கள் மேற்பார்வையாளரிடம் பேசுவதன் மூலம் இந்தச் சூழலைச் சிறப்பாகக் கையாள முடியும்.

**உதாரணம் 2:** எனது தள மேலாளர் வழக்கமாக பெண்களை இழிவுபடுத்தும் விதமாகப் பேசுகிறார், ஆண்களே சிறந்த பணியாளர்கள் என்று குறிப்பிடுகிறார், மேலும் ஆண்களுக்கு மட்டுமே பதவி உயர்வு அளிக்கிறார். இதைப் பற்றி இங்கு யாரிடமும் பேச எனக்குத் தயக்கமாக இருக்கிறது.

- இது ஒரு தீவிரமான குற்றச்சாட்டு – நீங்கள் உலகளாவிய மனிதவளத் தலைமைத்துவக் குழுவைத் தொடர்புகொண்டு இந்த நடத்தையைப் புகாரளிக்க வேண்டும்.

**உதாரணம் 3:** எனது இடத்தில் பணிபுரியும் சக ஊழியர் ஒருவர், முன்னாள் ஊழியர் மற்றும் தற்போது பணியில் இருக்கும் சில ஊழியர்களைப் பற்றி மிகவும் மோசமான விஷயங்களைக் கூறினார். எங்களது உள்ளூர் மனிதவளக் குழுவிடம் இதைப் புகாரளிக்க நான் அசௌகரியமாக உணர்கிறேன், நான் யாரைத் தொடர்புகொள்ளலாம்?

- இந்தச் சூழலில், நீங்கள் பிற உள்ளூர்த் தலைவர்கள், உலகளாவிய மனிதவளத் தலைமைத்துவக் குழு அல்லது பிற மூத்த தலைவர்களிடம் பேசலாம். அவர்கள் உங்களுக்கு வழிகாட்டலாம் அல்லது இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான மாற்று வழியைப் பரிந்துரைக்கலாம்.

**உதாரணம் 4:** ஒரு விற்பனையாளரின் நிறுவனத்திற்குத் தொழிலை மடைமாற்றுவதற்காக, எங்களது உள்ளூர் குழு அவரிடமிருந்து லஞ்சம் வாங்குவதாக நான் சந்தேகிக்கிறேன். என்னிடம் அந்த விற்பனையாளர் “பணம் பெறப்பட்டது” என்று குறிப்பிட்டுள்ள சில மின்னஞ்சல்கள் உள்ளன, மேலும் இதர பரிவர்த்தனைகளுடன் ஒத்துப்போகாத இது போன்ற செய்திகளும் உள்ளன. நான் யாரைத் தொடர்புகொள்ளலாம்?

- இத்தகைய சிக்கல்கள் Gentherm நன்னெறித் துறையின் அவசர உதவி எண்ணில் புகாரளிக்கப்பட வேண்டும்.  தொலைபேசி மற்றும் இணையம் ஆகிய இரண்டின் வழியாகவும் கிடைக்கும் இதில், உங்கள் குறையை அடையாளத்தை மறைத்துப் புகாரளிக்கலாம் மற்றும் அதற்குச் சரியான கவனமும் விசாரணையும் கிடைப்பதை உறுதி செய்யலாம்.

### புகார்ச் செயல்முறை

நல்லெண்ணத்துடன் எழுப்பப்படும் ஒவ்வொரு சிக்கலையும் Gentherm தீவிரமாக எடுத்துக்கொள்கிறது. அத்தகைய ஒவ்வொரு விஷயமும் தேவைக்கேற்ப விசாரிக்கப்படும், மேலும் தகுந்ததாக இருந்தால் Gentherm உடனடித் தீர்வு நடவடிக்கைகளை எடுக்கும். நீங்கள் சொந்தமாக விசாரணை நடத்தக்கூடாது, அதற்குப் பதிலாக நிறுவனத்தின் விசாரணை முயற்சிகளுக்கு நல்லெண்ணத்துடன் ஒத்துழைக்க வேண்டும். நெறிமுறைத் துறையின் அவசர உதவி எண் வழியாகப் புகாரளிக்கப்படுபவை சட்டம் மற்றும் இணக்கத் துறையினால் ஆய்வு செய்யப்படுகின்றன, தேவைப்பட்டால் விசாரணைத் திட்டம் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது, மேலும் ஒவ்வொரு வழக்கின் விவரங்களும், அதன் இறுதி முடிவு உட்பட, எங்களது ஆவணப்படுத்தல் செயல்முறைகளின் ஒரு பகுதியாக மூத்த தலைவர்களிடம் புகாரளிக்கப்படலாம்.

விசாரணைகள் இயன்றவரை ரகசியமாக நடத்தப்படும். ஒரு குறையை விசாரிக்கவும் அதற்குப் பொருத்தமான பதிலை வழங்கவும் அல்லது ஒரு கோரிக்கையை வழக்காட அல்லது தற்காத்துக் கொள்ளவும், புகாரளிக்கப்பட்ட சில தகவல்களை வெளிப்படுத்துவது அவசியமாகலாம். மேலும், ஒரு மீறலுடனோ மீறலெனச் சந்தேகப்படும் ஒன்றுடனோ தொடர்புடைய தகவல்களைச் சட்ட அமலாக்கம் அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டியிருக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ளபடி அடையாளம் மறைத்து அளிக்கப்பட்ட புகார்கள் ஏற்றுக்கொள்ளப்படும், இருப்பினும், புகாரளிக்கும் நபர் தன்னை வெளிப்படுத்திக்கொள்வதை நாங்கள் ஊக்குவிக்கிறோம்—அடையாளம் மறைத்து அளிக்கப்பட்ட புகார்கள் அந்த விஷயத்தை முழுமையாக விசாரிக்கவும், எங்களது கண்டுபிடிப்புகள் குறித்து உங்களிடம் தொடர்ந்து பேசவும் எங்களுக்கு இருக்கும் திறனைக் குறைத்துவிடலாம். உங்கள் அடையாளத்தை மறைத்தவாறே இருக்க விரும்பினால், உங்கள் குறைகளைச் சரியான முறையில் விசாரித்துத் தீர்ப்பதற்கு ஏதுவாக, முடிந்தவரை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தகவல்களை வழங்கவும்.



### பழிவாங்குதல் ஒருபோதும் பொறுத்துக்கொள்ளப்படாது

ஊழியர்கள் குறைகளைத் தெரிவிக்கவும் சிக்கல்களைக் குறித்துத் தெரிவிக்கவும் வசதியாக இருக்கும் ஒரு கலாச்சாரத்தைப் பேணுவதில் Gentherm அர்ப்பணிப்புடன் உள்ளது. கேள்விகள் அல்லது குறைகளை எழுப்புவதற்காக அல்லது உண்மையான அல்லது சந்தேகப்படும் மீறல்களை நல்லெண்ணத்துடன் புகாரளிப்பதற்காக, விசாரணையில் பங்கேற்பதற்காக அல்லது ஒத்துழைப்பதற்காக அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தின் மீறல்களில் பங்கேற்க மறுப்பதற்காக எவருக்கும் எதிராகப் பழிவாங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. பழிவாங்குவதில் ஈடுபடும் எவரும் ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

பழிவாங்குதல் பல வடிவங்களை எடுக்கலாம் மற்றும் வெவ்வேறு வழிகளில் வெளிப்படலாம். நல்லெண்ணத்துடன் புகாரளித்ததற்காக ஓர் ஊழியருக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு தண்டனை நடவடிக்கையும் பழிவாங்கலாகக் கருதப்படுகிறது மற்றும் அது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

### பொய்ப் புகாரளித்தல்

தவறான நடத்தை குறித்த புகார்கள் நிறுவனத்தால் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஒரு குறையைப் புகாரளிப்பதற்கு முன், உங்கள் புகார் நல்லெண்ணத்துடன் செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கெட்ட எண்ணத்துடன் பொய்ப் புகாரளிப்பது, Gentherm வழங்க விரும்பும் நேர்மையான மற்றும் நெறிமுறை சார்ந்த பணிச் சூழலுக்கு முரணானது. வேண்டுமென்றே அல்லது தெரிந்தே பொய்யான அல்லது தவறாக வழிநடத்தும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் எந்தவொரு ஊழியரும் இந்தக் கோட்பாடை மீறுபவர் ஆவார் மற்றும் அவர் ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.





03

# உட்பட்டு நடக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்

### சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ளுதல்

நமது நற்பெயரும் தொழில் வெற்றியும், பொருந்தக்கூடிய அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பற்றிய நமது அறிவு மற்றும் அவற்றிற்கு இணங்கி நடப்பதைப் பொறுத்தே அமைகின்றன. நிறுவனத்திற்குப் பொருந்தக்கூடிய அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது, மேலும் தொழில் கூட்டாளர்களுடனான நமது உறவின் அடிப்படையில் அவர்கள் இத்தகைய சட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது குறித்து, பொருத்தமான சூழலில் ஏதேனும் குறைகள் இருந்தால் அவற்றைத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் படித்துப் புரிந்துகொள்ளவும், பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளவும், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து சந்தேகம் இருந்தால் கேள்விகளைக் கேட்கவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்தக் கோட்பாடு அல்லது பிற கொள்கைகள் பொருந்தக்கூடிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளிலிருந்து வேறுபடும் இடங்களில், நீங்கள் எப்போதும் அதிகாரத்தின்படி உயர்ந்த தரநிலையையே பின்பற்ற வேண்டும்

### ஒப்பந்தக் கடமைகளுக்கு இணங்குதல்

அரசாங்கத்தால் கட்டாயமாக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் கூடுதலாக, Gentherm நிறுவனமானது நமது தொழில் கூட்டாளர்கள் மற்றும் பிற மூன்றாம் தரப்பினரின் ஒப்பந்த உரிமைகளுக்கும் உட்பட்டு உள்ளது. வழக்குகளும் இழப்பீட்டுக் கோரிக்கைகளும் நிறுவனத்திற்கு பணரீதியாகவும் நமது நற்பெயருக்கும் கணிசமான பாதிப்பை ஏற்படுத்திவிடலாம். எனவே, தகுந்த தலைவர்களால் விலக்கு அளிக்கப்படாத வரை, நிறுவனம் மேற்கொண்டுள்ள ஒப்பந்த ரீதியான சட்டக் கடமைகளுக்கு இணங்குவதற்கு நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

### வெளிநாட்டுச் சட்டங்களுக்கு உட்பட்டு நடத்தல்

ஓர் அமெரிக்க ("யு.எஸ்.") நிறுவனமாக, Gentherm இன் செயல்பாடுகள் வெளிநாட்டில் நடந்தாலும் அவை இறுதியில் அமெரிக்கச் சட்டங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கும். கூடுதலாக, நாம் இயங்குகின்ற அல்லது நாம் தொழில் செய்யும் நாடு மற்றும் இடத்தின் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். சில சூழல்களில், நீங்கள் பணிபுரியும் நாட்டின் உள்ளூர் பழக்கவழக்கங்கள் அமெரிக்கச் சட்டங்கள் அல்லது இந்தக் கோட்பாடில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகளுடன் முரண்படலாம். உள்ளூர்ச் சட்டங்களுக்கும் அமெரிக்கச் சட்டங்களுக்கும் அல்லது இந்தக் கோட்பாடுக்கும் இடையே முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், மேற்கொண்டு செயலாற்றும் முன் சட்டம் மற்றும் இணக்கத் துறையைக் கலந்தாலோசிக்க வேண்டும்.



**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: நீங்கள் அமெரிக்காவிற்கு வெளியே உள்ள ஒரு Gentherm தளத்தில் பணிபுரிகிறீர்கள். சமீபத்தில், உங்கள் விற்பனைக் குழு ஒரு அமெரிக்காவைச் சாராத அல்லாத நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. இந்த வெளிநாட்டுடன் வர்த்தகம் செய்வதைத் தடுக்கும் சட்டங்கள் அமெரிக்காவில் இருப்பதாக நீங்கள் உங்கள் மேலதிகாரியிடம் குறிப்பிட்டீர்கள். நமது நாட்டில் அந்தச் சட்டங்கள் இல்லை, இது ஒரு சிறிய பரிவர்த்தனை, இதை யாரும் கவனிக்கக்கூட மாட்டார்கள் என்பதால் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று உங்கள் மேற்பார்வையாளர் கூறிவிட்டார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: உங்கள் உள்ளுணர்வு சரி தான். அனைத்து Gentherm தொழிற்பிரிவுகளும், அவை அமைந்துள்ள இடம் அல்லது அவை எங்கு தொழில் எதுவாக இருந்தாலும், ஏற்றுமதி, தடைகள் மற்றும் வர்த்தகத் தடைகள் தொடர்பான அமெரிக்கச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். உங்கள் மேற்பார்வையாளரிடம் மீண்டும் பேசுங்கள், நமது கடமைகளையும் இந்தக் கோட்பாடில் நிறுவப்பட்டுள்ள வழிகாட்டுதல்களையும் அவருக்கு நினைவூட்டுங்கள். அது பலன் அளிக்கவில்லை என்றால், வழிகாட்டுதலுக்காக உங்கள் நிறுவனத்தினுள் உள்ள மனிதவளத் துறையை அணுகவும். உங்களுக்கு இன்னும் குறைகள் இருந்தால், சட்டம் மற்றும் இணக்கத் துறை அல்லது நெறிமுறைத் துறையின் அவசர உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

## விசாரணைகள் மற்றும் தணிக்கைகளுக்கு உட்பட்டு நடத்தல்

வலுவான நெறிமுறை அடித்தளம் மற்றும் கண்ணியமான கலாச்சாரத்தைப் பேணுவதற்கான எங்களது முயற்சிகளுக்கு ஏற்ப, தேவையான நிறுவனத்தினுள் அல்லது வெளியில் எந்தவொரு விசாரணை அல்லது தணிக்கைச் செயல்முறைக்கு ஒத்துழைக்க Gentherm அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, அனைத்து ஊழியர்களும் அனைத்து விசாரணைகள் அல்லது தணிக்கைகளுக்கு ஒத்துழைக்கவும் ஆதரவளிக்கவும்
நல்லெண்ண முயற்சியை மேற்கொள்ள வேண்டும் மற்றும் நமது வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் எவரும் அத்தகைய தணிக்கையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இதில் வெளிப்படையான முறையில் நடந்துகொள்வது, முழுமையான மற்றும் விரிவான தகவல்களை வழங்குவது, தெரிந்தே மற்றும் தீய எண்ணத்துடன் தவறான தகவல்களை வழங்குவதைத் தவிர்ப்பது மற்றும் சாத்தியமான வரை விசாரணை அல்லது தணிக்கைச் செயல்முறைக்கு ஆதரவாகச் செயல்படுவது ஆகியவை அடங்கும். கூடுதலாக, சட்டம் மற்றும் இணக்கத் துறையிடமிருந்து அனுமதி பெறும் வரை (நீங்கள் ஒரு அரசு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளாதவரை), நிறுவனத்தினுள் அல்லது வெளியே யாரிடமும் நடந்து வரும் விசாரணைகளைப் பற்றி விவாதிக்கக்கூடாது.

அமெரிக்கத் தேசிய தொழிலாளர் உறவுகள் சட்டத்தினால் ("NLRA") பாதுகாக்கப்பட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதைப் புகாரளிக்க வேண்டிய கடமை ஊழியர்களுக்கு இல்லை, மேலும் இந்தக் கோட்பாடில் உள்ள எதுவும் NLRA இன் கீழ் பாதுகாக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து அல்லது தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதிலிருந்து ஊழியர்களைக் கட்டுப்படுத்தவோ அல்லது ஊக்கமிழக்கச் செய்யவோ நோக்கமாகக் கொண்டவை அல்ல. கூடுதலாக, NLRA மீறப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளில், மேலாளர் அல்லாத ஊழியர் பங்கேற்பதை Gentherm ஊக்கப்படுத்தினாலும், அது அவருடைய தனிப்பட்ட விருப்பத்துக்கு உட்பட்டது.

இந்த வழிகாட்டுதலுடன் கூடுதலாக, ஏதேனும் விசாரணைகள் அல்லது தகவலுக்கான கோரிக்கைகளைப் பொருத்தமான பணியாளர்களிடம் புகாரளிப்பதை எப்போதும் உறுதிசெய்யுங்கள். வாடிக்கையாளர்கள் அல்லது விற்பனையாளர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் உங்கள் மேற்பார்வையாளர் அல்லது பிற உள்ளூர்ப் பணியாளர்களிடம் தெரிவிக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் அரசு நிறுவனங்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் உடனடியாக Gentherm சட்டம் மற்றும் இணக்கத் துறைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.





# 04

# ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் அனைவரையும் சேர்த்துக்கொள்ளும் சூழலுக்கு எங்களை உறுதிபூண்டுள்ளோம்

மக்கள் ஒருவரை ஒருவர் எவ்வாறு நடத்த வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்பதற்கான அடிப்படைக் கொள்கைகளை இந்தக் கோட்பாடு வரையறுக்கிறது. Gentherm இல், ஒவ்வொரு ஊழியரும் மற்றும் நாம் பழகும் ஒவ்வொரு நபரும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்படும் ஒரு கலாச்சாரத்தை உருவாக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். பலதரப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளுதல், சமத்துவம், அனைவரையும் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் அவர்களில் ஒருவராக உணர்தல் ஆகியவை ஆதரிக்கப்படும் சூழலை வளர்ப்பதன் மூலம், நாம் நிறுவனத்தின் வெற்றிக்கு உதவலாம் மற்றும் நமது பணியை நிறைவேற்றலாம்.

### பணிச் சூழல், பாகுபாடு செய்யாது இருத்தல் மற்றும் துன்புறுத்தாமல் இருத்தல்

பாதுகாப்பான, ஆக்கப்பூர்வமான மற்றும் வெளிப்படையான பணிச் சூழலை வழங்க Gentherm அர்ப்பணிப்புடன் உள்ளது. பல்வேறு பின்னணிகள், வேறுபாடுகள், யோசனைகள், திறன்கள் மற்றும் அனுபவம் கொண்ட பணியாளர்களை நாம் கொண்டுள்ளோம். சட்டவிரோதமான பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் இல்லாத நேர்மறையான பணிச் சூழலுடன் இணைந்து, இது நமது ஊழியர்களிடம் சிறந்த செயல்பாட்டைத் தூண்டுகிறது மற்றும் நமது வாடிக்கையாளர்களுடனான உறவை மேம்படுத்துகிறது.

பணியிடத்தில் மேற்பார்வையாளர், மேலாளர் அல்லது பிற ஊழியர், ஒப்பந்ததாரர், வாடிக்கையாளர், வழங்குநர் அல்லது பிற நபரால் செய்யப்படும் சட்டவிரோத பாகுபாடு அல்லது துன்புறுத்தலை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்; இதில் பாலியல் துன்புறுத்தல் அல்லது சட்டப்பூர்வமாகப் பாதுகாக்கப்பட்ட எந்தவொரு பிரிவினரின் மீதான துன்புறுத்தலும் அடங்கும். இதில் விரும்பத்தகாத உடலுறவுக்காக முன்னேறி வருதல் அல்லது கருத்துகள், அல்லது பாலியல் தன்மையுடைய பிற காட்சி, வாய்மொழி அல்லது உடல் ரீதியான நடத்தைகள் அடங்கும். மற்றவர்களுடன் தொழில்முறையான தகவல்தொடர்பில் ஈடுபடும்போது மனதைப் பாதிக்கும் செய்திகள், இழிவுபடுத்திக் குறிப்பிடுதல் அல்லது தகாத நகைச்சுவைகள் இல்லாமல் இருப்பதை கவனத்தில் கொள்ளுங்கள். மேலும், முறையான நடத்தை குறித்த எங்களது எதிர்பார்ப்புகள் நமது கட்டிடங்களையும் கடந்து, எந்தவொரு Gentherm நிகழ்வு, பணிச் செயல்பாடு, தொழில் பயணம் அல்லது Gentherm தொடர்பான பிற செயல்பாடுகளுக்கும் பொருந்தும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

Gentherm இல், பலதரப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளுதல், சமத்துவம், அனைவரையும் சேர்த்துக்கொள்ளுதல், அவர்களில் ஒருவராக உணர்தல் ஆகியவை எங்கள் கார்ப்பரேட் கலாச்சாரத்தின் முக்கியப் பங்குகளாக விளங்குகின்றன. மேலும், பலதரப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளுதல் புதியவற்றை உருவாக்க ஊக்கமளிப்பதாகவும் நம்புகிறோம். நமது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகங்களின் வாழ்வில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், எங்கள் வேறுபாடுகளை மதித்து, அனைவருக்கும் ஒரு சொந்தம் என்ற உணர்வை உருவாக்கும் உள்ளடக்கிய கலாச்சாரத்தை உருவாக்க நாங்கள் முயல்கிறோம். விண்ணப்பதாரர்கள் மற்றும் தற்போதைய ஊழியர்கள் அனைவருக்கும் சமமான வேலை வாய்ப்புகளை வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். தனிநபர்கள்





அவர்களின் தகுதிகள் மற்றும் பணித் திறனின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவார்கள், மேலும் இனம், இனக்குழு, நிறம், மதம், பாலினம், தேசியம், வம்சாவளி, வயது, குறைபாடு, குடும்ப நிலை, கர்ப்பம், முன்னாள் ராணுவத்தினர் நிலை, பாலின அடையாளம், பாலியல் விருப்பம் அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறு எந்த நிலையின் அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்பட மாட்டார்கள். குறைபாடுகள் உள்ள ஊழியர்களுக்கு, நிறுவனத்திற்கு அதிகப்படியான சிரமம் ஏற்படாத பட்சத்தில், அவர்கள் தங்கள் பணியின் முக்கிய செயல்பாடுகளைச் செய்யவும் வேலைவாய்ப்பில் முழுமையாகப் பங்கேற்கவும் ஏதுவாக நியாயமான வசதிகளை நாங்கள் வழங்குகிறோம்.

ஊழியர்கள் பலதரப்பட்டவர்களாக இருப்பதற்கு நாங்கள் மதிப்பு அளிக்கிறோம்.  பலதரப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளும் Gentherm இன் அர்ப்பணிப்பு குறித்து மேலும் அறிந்துகொள்ள, ONE (Our Network of Engagement - எங்கள் ஈடுபாட்டின் நெட்வொர்க்) முயற்சிகள் குறித்து இங்கே இங்கே படியுங்கள். இந்தக் கோட்பாடை மீறும் நடத்தைக்கு நீங்கள் ஆளாக்கப்பட்டாலோ அல்லது அதைக் கவனித்தாலோ, கையேட்டில் குறிப்பிட்டுள்ள முறைகளைப் பயன்படுத்தி அல்லது இந்தக் கோட்பாடில் வகுக்கப்பட்டுள்ள புகாரளிக்கும் வழிகளைப் பயன்படுத்தி உடனடியாகப் புகாரளிக்க வேண்டும். சட்டவிரோதமான பாகுபாடு அல்லது துன்புறுத்தல் தொடர்பான குறைகளை அறியும் மேற்பார்வையாளர்கள் அந்தச் சிக்கலைப் புகாரளிக்க வேண்டும். மற்ற நல்லெண்ணக் குறைகூறுதல்களைப் போலவே, புகாரைச் சமர்ப்பிக்கும் ஊழியர்களுக்கு எதிராக எந்தப் பழிவாங்கலும் அனுமதிக்கப்படாது.

### மனித உரிமைகள்

Gentherm தனது விநியோகச் சங்கிலியின் அனைத்து நிலைகளிலும், நாம் செயல்படும் அல்லது தொழில் செய்யும் ஒவ்வொரு இடத்திலும் உள்ள அனைத்து மக்களின் மனித உரிமைகளை மதிக்கிறது. இதில் நமது வாடிக்கையாளர்கள், நமது விநியோகச் சங்கிலி மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்கள் அனைவரும் அடங்குவர். மனித உரிமைகள் என்பவை எப்போதும் மதிக்கப்பட வேண்டிய மற்றும் போற்றப்பட வேண்டிய ஒரு அடிப்படை உரிமையாகும். இந்த அர்ப்பணிப்புக்கு இணங்க, ஆள் கடத்தல், கட்டாய உழைப்பு அல்லது குழந்தைத் தொழிலாளர் முறையை Gentherm பொறுத்துக்கொள்ளாது, மேலும் நமது தொழில் கூட்டாளர்கள் எவரும் இதனைச் செய்வதையும் பொறுத்துக்கொள்ள மாட்டோம். வேலை நேரம், ஊதியங்கள் மற்றும் சலுகைகள் தொடர்பான ஒழுங்குமுறைகளுக்கும் நாம் உட்பட்டு நடப்பதையும் உறுதி செய்ய Gentherm செயல்படுகிறது.  வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு நிபந்தனைகள் தொடர்பான பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் உட்பட்டு நடப்போம். Gentherm இன் உலகளாவிய மனித உரிமைக் கொள்கை இந்தத் தலைப்புகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறது, மேலும் இது நமது வலைத்தளத்தில் இங்கே கிடைக்கிறது.

### பணியிட வன்முறை

பாதுகாப்பிற்கான நமது அர்ப்பணிப்பிற்கு ஏற்ப, வெளிப்படையான அல்லது மறைமுகமான எந்த வன்முறை அச்சுறுத்தல்கள், பின்தொடர்ந்து தொல்லை கொடுத்தல், வன்முறைச் செயல்கள் அல்லது மக்கள் அல்லது சொத்துகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பிற நடத்தைகளை Gentherm பொறுத்துக்கொள்ளாது. அச்சுறுத்தும் நடத்தை அல்லது வன்முறை குறித்த அனைத்துப் புகார்களையும் நாங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம், மேலும் அத்தகைய விஷயங்களை நாங்கள் விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்போம். அத்தகைய நடத்தை குறித்த சம்பவங்களைப் புகாரளிக்க, சட்டம் மற்றும் இணக்கத் துறையின் அவசர உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். அவசரநிலையின்போது,உள்ளூர் மனிதவளத் துறை, தளத்தில் உள்ள பாதுகாப்புப் பிரிவு அல்லது உள்ளூர் அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்.

### போதைப் பொருள் பயன்பாடு

போதைப் பொருட்கள் அல்லது மதுவின் தாக்கத்தில் பணிபுரிவது பாதுகாப்பு அபாயத்தை உருவாக்கலாம் மற்றும் உங்கள் முடிவெடுக்கும் திறனைப் பாதிக்கலாம். இதன் காரணமாக, பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு ஏற்ப, அத்தகைய போதைப்பொருட்களின் தாக்கத்தில் ஊழியர்கள் பணிபுரிவதை Gentherm தடை செய்கிறது. பாதுகாப்பான பணிச் சூழலை உறுதிப்படுத்த உதவ, ஊழியர்கள் பணிக்குத் தகுதியான நிலையில் இருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மருத்துவரால் உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட சில மருந்துகள் கூட உங்கள் பணியைப் பாதுகாப்பாகச் செய்யும் திறனைப் பாதிக்கலாம் என்பதை நினைவில்கொள்ளுங்கள். உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் உங்கள் பணியைப் பாதுகாப்பாகச் செய்யும் திறனில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது குறித்து உங்கள் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள், மேலும் ஏதேனும் குறைகள் இருந்தால் உங்கள் மேற்பார்வையாளர் அல்லது உங்கள் நிறுவன மனிதவளத் துறையிடம் தெரிவிக்கவும்.



05

# திறம்பட பணியாற்றவும் மற்றும் பொறுப்பேற்றுக்கொள்ளுதலுக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்

மக்கள் சரியானதைச் செய்யவும், முன்னரே தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகளுடன் ஒத்துப்போகும் வகையில் செயல்படவும் அர்ப்பணிப்புடன் இருக்கும்போது, நெறிமுறை மற்றும் கண்ணியம் சார்ந்த கலாச்சாரம் உருவாகிறது. நெறிமுறை சார்ந்த கலாச்சாரத்தின் மையமாகப் பொறுப்பேற்றுக்கொள்ளுதலும் உள்ளது. இந்தக் கோட்பாடும் எங்களது பிற கொள்கைகளும் வழிகாட்டுதலை வழங்கினாலும், நாம் நமது மதிப்பீடுகளின்படி வாழ்வதை உறுதி செய்ய, சரியான முடிவுகளை எடுப்பதும், கேள்விகளைக் கேட்பதும், தேவைப்படும்போது குரல் கொடுப்பதும் உங்கள் ஒவ்வொருவரின் கையில் தான் உள்ளது.



### நலன் சார்ந்த முரண்பாடுகள்

தனிப்பட்ட நலன்கள் அல்லது செயல்பாடுகள் நீங்கள் புறநிலையாகச் செயல்படும் திறனில் தலையிடும்போது நலன் சார்ந்த முரண்பாடுகள் ஏற்படுகின்றன. Gentherm இல், நலன் சார்ந்த முரண்பாடுகளை அல்லது அத்தகைய முரண்பாடு போன்ற தோற்றத்தைக் கூட தவிர்க்க நாங்கள் விழைகிறோம். சாத்தியமான நலன் சார்ந்த முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய ஒவ்வொரு சூழலையும் அல்லது நிகழ்வையும் இந்தக் கோட்பாடு விவரிக்கவில்லை என்றாலும், கருத்தில் கொள்ள வேண்டிய சில நிகழ்வுகள் இங்கே உள்ளன:

- தனிப்பட்ட உறவுகள்: ஒரு நண்பர், குடும்ப உறுப்பினர் அல்லது நீங்கள் காதல் அல்லது நெருக்கமான தனிப்பட்ட உறவு கொண்டுள்ள ஒருவரை மேற்பார்வை செய்தல்.
- நிதி சார்ந்த நலன்: Gentherm உடன் தொழில் செய்யும் அல்லது Gentherm உடன் ஏதேனும் ஒரு வகையில் போட்டியிடும் நிறுவனத்தில் முதலீடு செய்தல்.
- தொழில் வாய்ப்புகள்: Gentherm உடன் நீங்கள் செய்த பணி அல்லது செயல்பாடுகள் காரணமாக நீங்கள் அறிந்த தகவல்களை, Gentherm உடன் போட்டியிடுவது உட்பட, உங்களுக்காகப் பயன்படுத்துதல்.
- குடும்ப உறுப்பினர்கள்: Gentherm உடன் தொடர்புடைய உங்கள் பதவி, அறிவு அல்லது செயல்பாடுகளின் அடிப்படையில், உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவர் முறையற்ற சலுகைகள் அல்லது ஆதாயங்களைப் பெற அனுமதித்தல்.
- அரசு அதிகாரிகளுடனான உறவுகள்: குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில், அரசு அதிகாரிகளுடன் தனிப்பட்ட உறவு கொண்டுள்ள ஊழியர்கள், அந்தச் சூழலைப் பற்றித் தங்கள் மேற்பார்வையாளர் மற்றும் மனிதவளத் துறையிடம் தெரிவிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஊழியர்கள் தங்கள் முதன்மையான வேலைவாய்ப்பாக Gentherm மீதான அர்ப்பணிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று Gentherm எதிர்பார்க்கிறது. ஊழியர்கள் வேறு வேலைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டாலும், அந்த வேலைவாய்ப்பு உங்கள் நிறுவன மனிதவளத் துறையிடம் தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் அது சாத்தியமான அல்லது உண்மையான நலன் சார்ந்த முண்பாட்டை ஏற்படுத்தக்கூடாது. வெளி வேலைவாய்ப்பு, Gentherm க்கான தனது கடமைகளை நிறைவேற்றும் ஊழியரின் திறனில் தலையிடக்கூடாது.

நலன் சார்ந்த முரண்பாடுகள் எப்போதும் தெளிவாகவோ அல்லது எளிதில் அடையாளம் காணக்கூடியதாகவோ இருக்காது. உங்களுக்கு ஏதேனும் கேள்வி இருந்தால், உங்கள் மேற்பார்வையாளரிடம் கலந்தாலோசிக்க வேண்டும் அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறைக்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும்.

### உதவிக் குறிப்புகள்

உங்களுக்குச் சாத்தியமான நலன் சார்ந்த முரண்பாடு எப்போது ஏற்படும் என்பதை அடையாளம் காண உதவ, உங்களிடமே இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

- இது Gentherm க்காகப் பணிபுரியும் எனது திறனில் தலையிடுகிறதா?
- நிறுவனத்தின் ஆதாரங்கள், தகவல்கள் அல்லது உறவுகளை எனக்காகவோ அல்லது வேறு ஒருவரின் நலனுக்காகவோ நான் பயன்படுத்துகிறேனா?
- நலன்களின் முரண்பாடு இருப்பதாக வேறு ஒருவருக்குத் தோன்ற வாய்ப்புள்ளதா?
- எனது முடிவு அல்லது எனது செயல்பாடுகள் Gentherm அல்லது Gentherm இன் நலன்களுடன் போட்டியிடுகிறதா?
- இந்த முடிவின் ஏதேனும் ஒரு பகுதி எனது தனிப்பட்ட உறவுகளால் அல்லது ஏதேனும் தனிப்பட்ட ஆதாயத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?

இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றிற்கு நீங்கள் "ஆம்" என்று பதிலளித்திருந்தால், உங்களுக்கு நலன்களின் முரண்பாடு இருக்கலாம், மேலும் கூடுதல் வழிகாட்டுதலுக்காக உங்கள் மேற்பார்வையாளரிடம் பேசுமாறு ஊக்கப்படுத்தப்படுகிறீர்கள்.

நலன்களின் முரண்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய சில பொதுவான சூழல்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:

- குடும்ப உறுப்பினர், வாழ்க்கைத் துணை அல்லது நெருங்கிய நண்பருடன் Gentherm தொழிலை நடத்துதல். தனிப்பட்ட உறவுகளையும் தொழிலையும் இணைக்கும் சூழல்களை நாம் பொதுவாகத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் இது ஒரு நண்பர், உறவினர் அல்லது வாழ்க்கைத் துணைக்குச் சரியானது மற்றும் Gentherm க்குச் சரியானதைச் செய்வதற்கு இடையில் ஒரு முரண்பாட்டை உருவாக்கலாம். இதில், நாம் தனிப்பட்ட உறவு கொண்டுள்ள எவரையும் நேரடியாகப் பாதிக்கக்கூடிய தொழில் முடிவுகளை எடுப்பது அடங்கும்; உதாரணமாக அவர்களை ஓர் ஊழியராக அல்லது விற்பனையாளராகப் பணியமர்த்துவது, Gentherm சார்பாக அவர்களிடம் இருந்து பொருட்கள் அல்லது சேவைகளை வாங்குவது, அல்லது அவர்களுக்குத் தொழிலில் முறையற்ற விதத்தில் சாதகமாக நடந்துகொள்வது போன்றவை. ஒரு குடும்ப உறுப்பினர், வாழ்க்கைத் துணை அல்லது நெருங்கிய நண்பருடன் உங்களுக்கிருக்கும் உறவின் காரணமாக அவர்களைப் பணியமர்த்துவதன் மூலமோ அல்லது அவர்களுடன் தொழில் செய்வதன் மூலமோ அவர்களுக்குச் சாதகமாக இருப்பது, 'வாரிசு அரசியல்' எனப்படும் ஒரு வகை நலன்களின் முரண்பாடாகக் கருதப்படலாம் மற்றும் இது தனித்துவமான சவால்களை ஏற்படுத்தும். எப்போதும் வெளிப்படையாக இருங்கள், இத்தகைய சூழல் எழுந்தால் அல்லது எழக்கூடிய வாய்ப்பு இருந்தால் உங்கள் மேற்பார்வையாளர் அல்லது மனிதவளத் துறையிடம் தெரியப்படுத்துங்கள்.
- ஒரு குடும்ப உறுப்பினர், உறவினர் அல்லது நெருங்கிய தனிப்பட்ட நண்பருடன் ஏதேனும் ஒரு வகையான தொழில் சார்ந்த தகவல்தொடர்பை ஏற்படுத்துவது அல்லது கொண்டிருப்பது. அத்தகைய நபர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உங்களிடம் தொழில்சார்ந்த தகவல் தொடர்பில் ஈடுபட்டால் அல்லது நீங்கள் அவரிடம் அவ்வாறு ஈடுபட்டால், உங்கள் உறவு ஒரு முரண்பாட்டை ஏற்படுத்தலாம், அதை நீங்கள் உங்கள் நிறுவன மனிதவளத் துறைக் குழுவிடம் புகாரளிக்க வேண்டும்.
- முன்னாள் Gentherm ஊழியருடன் Gentherm தொழிலை நடத்துதல். சில நேரங்களில் Gentherm ஊழியர்கள் நமது நிறுவனத்தை விட்டு வெளியேறி, Gentherm உடன் தொழில் செய்யும் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். இந்தத் தனிநபருடனான தொழில்ரீதியான பரிவர்த்தனைகள், குறிப்பாக அவர்களின் நிறுவனம் அல்லது Gentherm நியாயமற்ற தொழில்ரீதியான சாதகத்தைப் பெற்றால், அது நலன் முரண்பாடுகளை ஏற்படுத்தலாம். நலன் முரண்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பைத் தவிர்க்க முன்னாள் Gentherm ஊழியர்களுடன் ஏதாவது தொழில்ரீதியான தொடர்புகள் இருந்தால் அதை வெளிப்படுத்துவது அவசியம்.
- வெளி வேலைவாய்ப்பு. ஒரு போட்டியாளரிடம் பணிபுரிவது அல்லது Gentherm உடன் போட்டியிடும் அல்லது தொழில் செய்யும் ஒரு தொழிலைத் தொடங்குவது போன்ற, Gentherm இல் நமது பொறுப்புகளை எதிர்மறையாகப் பாதிக்கும் அல்லது அவற்றில் தலையிடும் வெளிப்புற வேலைவாய்ப்பை நாம் ஏற்கக்கூடாது.
- பிற நிறுவனங்களில் முதலீடு செய்தல். Gentherm இன் போட்டியாளர்கள், சப்ளையர்கள் அல்லது வாடிக்கையாளர்களாக இருக்கும் நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க அளவு நலம் நாடுவதைத் தவிர்ப்பது, நலன் முரண்பாடுகளிலிருந்து நாங்கள் விலகி இருக்க உதவுகிறது. இருப்பினும், பொதுவில் வர்த்தகம் செய்யப்படும் நிறுவனங்களில் சிறிய அளவிலான முதலீடுகளைக் கொண்டிருப்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்கது.
- இயக்குநர் குழுவில் இணைந்து சேவை செய்தல். ஒரு தொண்டு, கல்வி அல்லது இலாப நோக்கற்ற நிறுவனம் அல்லது வர்த்தக சங்கத்தின் இயக்குநர் குழுவில் பணியாற்ற நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால், அந்தச் சூழல் நலன் சார்ந்த முரண்பாட்டை உருவாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த, ஒப்புக்கொள்வதற்கு முன் உங்கள் மேலாளர் அல்லது மேற்பார்வையாளரிடம் பேசுங்கள். எந்தவொரு வெளி நிறுவனத்திலும் ஒரு இயக்குநர் அல்லது அதிகாரியாகப் பதவியை ஏற்கும் முன்பும் நீங்கள் நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.



**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: நீங்கள் பணிசெய்யும் Gentherm அலுவலகம் ஒரு பணியைச் செய்ய ஒரு நிலப்பரப்பு மேம்பாட்டு நிறுவனத்தைத் தேடுகிறது. உங்கள் சகோதரர் ஒரு நிறுவனத்தை வைத்துள்ளார், அவர் ஏலம் எடுக்க ஆர்வமாக உள்ளார். அது அனுமதிக்கப்படுமா? அது நலன் சார்ந்த முரண்பாடா? நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: நலன் சார்ந்த முரண்பாடு என்பது சிக்கலானது மற்றும் அதை அடையாளம் காண்பதோ அல்லது தீர்வுகாண்பதோ எப்போதும் எளிதானது அல்ல. இந்தச் சூழலில், உங்கள் சகோதரரின் நிறுவனம் அந்தத் திட்டத்திற்கு ஏலம் எடுக்கவும் மற்ற நிறுவனங்களைப் போலவே பரிசீலிக்கப்படவும் சுதந்திரம் உள்ளது. சாத்தியமான முரண்பாடு என்பது (1) வெற்றிபெறும் ஏலத்தைத் தேர்ந்தெடுப்பதில் அல்லது பாதிப்பதில் நீங்கள் ஈடுபடுவது, மற்றும் (2) அந்த நிறுவனத்தின் உரிமையாளருடனான உங்கள் உறவை நீங்கள் வெளிப்படையாகவும் முறையாகவும் தெரிவிப்பது ஆகியவற்றைப் பொறுத்தது.

நிறுவனத்தின் கொள்முதல் நடைமுறையில் அல்லது தீர்மானங்களில் நீங்கள் ஈடுபடவில்லை என்றால் அல்லது அவற்றின் மீது உங்களால் செல்வாக்கு செலுத்த முடியாது என்றால், உங்களுக்கு அநேகமாக நலன் சார்ந்த முரண்பாடு இருக்காது. இதற்கும் உங்களுக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு குறைவாக உங்களுக்கான நலன் சார்ந்த முரண்பாடும் இருக்கும்.

எந்தவொரு நிகழ்விலும், நீங்கள் எப்போதும் வெளிப்படையாக இருக்க வேண்டும் மற்றும் சாத்தியமான முரண்பாடு குறித்து உங்கள் நிறுவனத்தின் மனிதவளக் குழுவிடம் புகாரளிக்க வேண்டும். வெளிப்படைத்தன்மையோடு இருப்பது ஒரு நலன் சார்ந்த முரண்பாடு இருப்பதற்கான தோற்றத்தைக் குறைக்க உதவும். அத்தகைய தகவலைக் கொள்முதல் குழுவோடு சட்டம் மற்றும் இணக்கத் துறையும் ஆராயும்.



## நிறுவனத்தினுள் இருப்பவர்களின் வர்த்தகம்

பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவல் உங்களிடம் இருக்கும்போது, அத்தகவலை அடிப்படையாகக் கொண்டு அல்லாமல் வேறு காரணத்திற்காக நீங்கள் வர்த்தகம் செய்தாலும், ஜென்தர்ம் பங்குகளை வர்த்தகம் செய்வது பொதுவாகச் சட்டவிரோதமானது. "பொருளீட்டுதல் சார்ந்த" என்பது, பங்குகளை வாங்கலாமா, விற்கலாமா அல்லது வைத்திருக்கலாமா என்பது குறித்து முடிவெடுப்பதில் முதலீட்டாளர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் தகவலைக் குறிக்கும்.

Gentherm என்பது ஒரு பொது வர்த்தக நிறுவனம் ஆகும். Gentherm ஒரு பங்கு வர்த்தகக் கொள்கையைப் பராமரிக்கிறது; இது பொதுவாக Gentherm ஊழியர்கள் மற்றும் இயக்குநர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது அவர்களுடன் வசிப்பவர்கள் அல்லது யாருடைய பங்குப் பரிவர்த்தனைகள் அவர்களின் செல்வாக்கு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறதோ அவர்கள் பின்வருவனவற்றைச் செய்வதைத் தடை செய்கிறது:

- Gentherm பற்றிய பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவல் உங்களிடம் இருக்கும்போது, எந்த நேரத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ Gentherm பங்குகளை வாங்குவது, விற்பது அல்லது பரிவர்த்தனை செய்வது;

- நிறுவனத்தின் பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவலைப் பயன்படுத்தி ஆதாயம் அடைவது அல்லது அத்தகவலை Gentherm க்கு வெளியே உள்ள பிற நபர்களுக்குத் தெரிவிப்பது அல்லது அத்தகைய நபர்களுக்கு Gentherm பங்குகளைப் பரிவர்த்தனை செய்யலாமா என்று பரிந்துரைப்பது போன்ற எந்தவொரு செயலிலும் ஈடுபடுவது; மற்றும்

- நிறுவனத்தின் நலனுக்காக ஒரு தொழில்முறை நோக்கம் மற்றும் ரகசியக் காப்பு ஒப்பந்தத்தினால் பாதுகாக்கப்பட்டாலோ அல்லது Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரால் எழுத்துப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டாலோ தவிர, குடும்ப உறுப்பினர்கள் உட்பட Gentherm க்கு வெளியே உள்ள எந்தவொரு நபருக்கும் பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவல்களை வெளிப்படுத்துவது.

நிறுவனத்தின் பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவல்களைப் பெறக்கூடிய பிற மூன்றாம் தரப்பினருக்கும் இத்தகைய தடைகள் விதிக்கப்படலாம்.

Gentherm இன் இயக்குநர் குழு உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் CEO அல்லது CFO ஆகியோரிடம் தொழில்சார்ந்த தகவல்தொடர்பில் ஈடுபடுபவர்கள், அத்துடன் நிறுவனத்தில் இருக்கும் நபர்கள் என வகைப்படுத்தப்பட்ட பிற ஊழியர்கள், உரிய முன்-அனுமதியைப் பெற்ற பின்னரே ஒதுக்கப்பட்ட வர்த்தகக் காலங்களில் Gentherm பங்குகளைப் பரிவர்த்தனை செய்ய முடியும்.

கூடுதலாக, பங்கு வர்த்தகக் கொள்கைக்கு உட்பட்ட நபர்கள், நிறுவனத்தின் பங்குகளை ஈடாக வைக்கவோ அல்லது எந்தவொரு டெரிவேட்டிவ் அல்லது குறுகிய காலப் பரிவர்த்தனைகளில் ஈடுபடவோ கூடாது.

நீங்கள் நிறுவனத்தில் இருக்கும் ஒரு நபர் தானா என்பது உங்களுக்குத் தெரியவில்லை என்றால், தெளிவுபெற Gentherm இன் சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ளவும். Gentherm இன் பங்கு வர்த்தகக் கொள்கை குறித்த கூடுதல் தகவல்களுக்கு, எங்களது வலைத்தளத்தை இங்கே பார்க்கவும்.

**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: ஒரு குடும்ப விருந்தின்போது, உங்கள் சகோதரர் Gentherm இன் நிதி மற்றும் தொழில் செயல்திறன் பற்றியும், அவர் நிறுவனத்தின் பங்குகளை வாங்க வேண்டுமா என்றும் கேட்கிறார். அவர் ஒரு சிறிய அளவிலான பங்குகளை வாங்க நினைக்கிறார். வேலை செய்யும் இடத்தில் இருந்து, இன்னும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படாத ஒரு மிகப்பெரிய தொழில் வெற்றியைப் பற்றி நீங்கள் சமீபத்தில் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: உள்நிலை வர்த்தகம் என்பது உங்கள் தனிப்பட்ட வர்த்தகச் செயல்பாட்டை மட்டும் உள்ளடக்கியது அல்ல, இது பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவல்களைப் பற்றி மற்றவர்களுக்கு "துணுக்கு" கொடுப்பதையும் அல்லது கூறுவதையும் உள்ளடக்கியது. நிறுவனத்தினுள் இருந்து பெற்ற தகவல்களைப் பயன்படுத்துவது எந்த வகையிலும் சட்டவிரோதமானது, பரிவர்த்தனையின் அளவு எதுவாக இருந்தாலும் இது பொருந்தும். உங்கள் சகோதரர் கேட்ட நிறுவன விவகாரங்கள் குறித்து விவாதிக்க உங்களுக்கு அனுமதி இல்லை என்று அவரிடம் நீங்கள் கூற வேண்டும்.

## பரிசுகளும் வெகுமதிகளும்

சிறிய பரிசுகள் மற்றும் எளிய வெகுமதிகளைப் பரிமாறிக்கொள்வது தொழிலின் ஒரு சாதாரணப் பகுதி என்பதையும், அது தொழில்முறை உறவுகளை உருவாக்குவதில் ஒரு முக்கியப் பங்காக இருக்கும் என்பதையும் Gentherm அங்கீகரிக்கிறது. இருப்பினும், ஊழியர்கள் நிறுவனத்திற்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலோ அல்லது சட்டத்தை மீறும் வகையிலோ தொழில் கூட்டாளர்களால் ஈர்க்கப்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும். மேலும், ஊழியர்களும் நிறுவனத்தின் பிற பிரதிநிதிகளும் ஒரு வழக்கமான நடைமுறையாகத் தொழில் கூட்டாளர்களுக்குப் பரிசுகளையோ அல்லது மதிப்புமிக்க மற்ற பொருட்களையோ வழங்கக்கூடாது; மேலும் சில நபர்களுக்கு அல்லது குறிப்பிட்ட பண மதிப்பிற்கு மேல் அத்தகைய பொருட்களை வழங்குவதற்கோ அல்லது ஏற்பதற்கோ தடை விதிக்கப்படலாம். எந்தப் பரிசுகள் தகுந்தவை அல்லது எவை தகாதவை என்பது எப்போதும் தெளிவாகத் தெரியாமல் இருக்கலாம். இது தொடர்பாக உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், சட்டம் மற்றும் இணக்கத் துறையின் ஒரு உறுப்பினரிடம் கலந்தாலோசிக்கவும்.

தொழில்முறை உறவுகளை உருவாக்க அல்லது மேம்படுத்தப் பரிசுகள் அல்லது வெகுமதிகளுக்காக நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்துவது பொதுவாக நியாயத்தன்மை தரநிலைகள் மற்றும் வழக்கமான ஆய்வுக்கு உட்பட்டது. த்தகைய பரிசுகள் அல்லது வெகுமதிகள் ஒருபோதும் ரொக்கமாக இருக்கக்கூடாது, அவை பொதுவாக எப்போதாவது ஒருமுறை மட்டுமே வழங்கப்பட வேண்டும் மற்றும் பொருந்தக்கூடிய அனைத்துப் பணியிடக் கொள்கை வழிகாட்டுதல்களையும் பின்பற்ற வேண்டும். பல சந்தர்ப்பங்களில், பரிசுகள் மூத்த தலைவர்களால் முன்கூட்டியே ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

குறிப்பிடத்தக்க மதிப்புடைய எந்தவொரு பொருளும் உடனடியாகத் திருப்பித் தரப்பட வேண்டும் மற்றும் உங்கள் மேற்பார்வையாளர் அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறையின் உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட வேண்டும். உடனடியாகத் திருப்பித் தருவது சாத்தியமில்லை என்றால், அந்தப் பொருள் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக அல்லது நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பப்படி தகுந்ததாகக் கருதப்படும் வேறு ஒரு பயன்பாட்டிற்காக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நிறுவனத்தின் சார்பாகத் தொழில்முறை கேளிக்கையில் ஈடுபடும்போது, பொது அறிவையும் நிதானத்தையும் பயன்படுத்தவும். கேளிக்கை மற்றும் பரிசுகளை வழங்குவது ஒருபோதும் பரஸ்பர நடவடிக்கையின் அடிப்படையில் இருக்கக்கூடாது. நிறுவனத்துடன் தொழில் செய்பவர்களுக்கு வழங்கப்படும் அல்லது அவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு தொழில்முறை கேளிக்கையும் எப்போதாவது ஒருமுறை மட்டுமே நடப்பதாகவும், எளிமையானதாகவும், கலாச்சார ரீதியாகத் தகுந்ததாகவும் மற்றும் முறையான தொழில் இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். உங்கள் திட்டங்கள் ஆடம்பரமாகத் தோன்றினாலோ அல்லது பங்கேற்பாளர்களில் அரசு அதிகாரிகள் எவரேனும் இருந்தாலோ, உங்கள் திட்டங்களைச் சட்டம் மற்றும் இணக்கத் துறையிடம் கலந்தாலோசிக்கவும்.

இங்கு விவரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலுடன் கூடுதலாக, அரசு அதிகாரிகள் அல்லது அரசு நிறுவனங்களுக்குப் பரிசுகள் அல்லது நன்கொடைகளை வழங்குவது தொடர்பாகச் சிறப்புக் கட்டுப்பாடுகளும் உள்ளன. கூடுதல் வழிகாட்டுதலுக்கு, Gentherm ஊழியர்களுக்கு நிறுவனத்தினுள் கிடைக்கக்கூடிய Gentherm இன் பரிசுக் கொள்கைகளைப் பார்க்கவும்.

யார் அரசு அதிகாரி என்பது எப்போதும் வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அரசாங்கத்துடன் மறைமுகத் தொடர்பு இருக்கலாம் என்று நீங்கள் கருதும் ஒருவருக்குப் பரிசு அல்லது நன்கொடை வழங்க நீங்கள் நினைத்தால், நீங்கள் சட்டம் மற்றும் இணக்கத் துறையின் ஒரு உறுப்பினரிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.

**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: ஒரு விற்பனையாளர் தனது புதிய தயாரிப்புகள் மற்றும் பிற வழக்கமான தொழில் மேம்பாடுகள் குறித்து விவாதிக்க உங்களை இரவு விருந்திற்கு அழைக்கிறார். விருந்து முடிந்ததும், விற்பனையாளர் உங்களுக்கு ஒரு கவரை வழங்குகிறார், அதை நீங்கள் பின்னர் திறந்து பார்க்கும்போது அதில் சிறிய மதிப்பிலான "நன்றி" தெரிவிக்கும் கிஃப்ட் கார்டு இருப்பதைக் காண்கிறீர்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: இரவு விருந்துச் சந்திப்பும் விவாதமும் தகுந்ததாகவும் கொள்கைக்கு இணக்கமாகவும் தோன்றுகிறது; இருப்பினும், அந்தப் பரிசு, அதன் மதிப்பு எதுவாக இருந்தாலும், தகாதது மற்றும் இந்தக் கோட்பாடை மீறுவதாகும். நீங்கள் உடனடியாக உங்கள் மேற்பார்வையாளர் மற்றும் Gentherm சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும். Gentherm இந்த விற்பனையாளரையும் அவர்களின் செயல்களையும் ஆய்வு செய்து, தொழில்முறை கூட்டாண்மை தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும்.



# 06

# உலகளாவிய மனநிலைக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்

ஒரு உலகளாவிய நிறுவனமாக, நாங்கள் எங்கு செயல்பட்டாலும் அல்லது தொழில் செய்தாலும், நமது மதிப்பீடுகளையும் தொழில் நடைமுறைகளையும் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்த உலகளாவிய சிந்தனையைக் கொண்டிருப்பது ஒரு நெறிமுறை கலாச்சாரத்தை உருவாக்க அவசியமாகும்.



## ஊழல் எதிர்ப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு

லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக Gentherm சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறையைக் கொண்டுள்ளது, மேலும் நமது அனைத்துத் தொழில்முறை செயல்பாடுகளிலும் உறவுகளிலும் தொழில் ரீதியாகவும், நேர்மையாகவும், கண்ணியத்துடனும் செயல்பட அர்ப்பணிப்புடன் உள்ளது. பிற தொழில்கள் பயன்படுத்தக்கூடிய எந்தவொரு உள்ளூர் நடைமுறைகள் அல்லது பழக்கவழக்கங்கள் இருந்தாலும், தொழிலை எளிதாக்குவதற்காக லஞ்சம் வழங்கப்படுவதையோ அல்லது லஞ்சம் ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது வழங்கப்படும் என்று உணர்த்தும் வகையில் செயல்படுவதையோ தடுக்கும் அமெரிக்க மற்றும் அமெரிக்கா அல்லாத சட்டங்களுக்கு நமது நிறுவனம் உட்பட்டது. அரசு அதிகாரியாகக் கருதப்படக்கூடிய எந்தவொரு நபருக்கும் மதிப்புமிக்க எதையும் வழங்குவது எந்தச் சூழலிலும் தடைசெய்யப்பட்டுள்ளது, மேலும் நிறுவனத்தின் தொழில் தொடர்பாக லஞ்சம் கொடுக்க முயலக்கூடும் என்று நீங்கள் நியாயமாக நம்பும் எந்தவொரு மூன்றாம் தரப்பினரையும் நீங்கள் ஒருபோதும் பணியில் ஈடுபடுத்தக்கூடாது. நமது கொள்கைகளின்படி வரையறுக்கப்பட்ட பரிசுகள் மற்றும் வெகுமதிகளுக்கு உட்பட்டு, Gentherm இன் தொழில் கூட்டாளர்களும் இதே தரநிலையைப் பின்பற்ற வேண்டும். Gentherm இன் லஞ்ச ஒழிப்புக் கொள்கை இந்த நிலைப்பாட்டைப் பற்றி விரிவாகக் கூறுகிறது, இது நமது வலைத்தளத்தில் இங்கே கிடைக்கிறது.

எந்தவொரு நாட்டிலும் உள்ள அரசு அதிகாரிக்கு ஏதேனும் பரிசு, நன்கொடை அல்லது தொழில்முறைக் கேளிக்கைகளை வழங்க நீங்கள் நினைத்தால், அது நிறுவனத்தின் 'உலகளாவிய பயணம், பரிசுகள் மற்றும் கேளிக்கை மற்றும் செலவின அறிக்கைக் கொள்கை' மற்றும் பொருந்தக்கூடிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் ஆகிய இரண்டிற்கும் கண்டிப்பாக இணங்க வேண்டும், மேலும் நீங்கள் Gentherm இன் சட்டம் மற்றும் இணக்கத் துறையிடமிருந்து முன்-அனுமதியைப் பெற வேண்டும்.  தகுந்த பரிசு நிலைகள், அனுமதிச் செயல்முறைகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய கூடுதல் தகவல்கள், Gentherm இன் நிறுவனத்தினுள் உள்ள கொள்கையான 'உலகளாவிய பயணம், பரிசுகள் மற்றும் கேளிக்கை, மற்றும் செலவின அறிக்கைக் கொள்கையில்' கிடைக்கின்றன.

**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: உங்கள் நேரடி மேற்பார்வையாளர் அந்த ஆலையின் மேலாளர் ஆவார். உங்கள் தளம் சமீபத்தில் கட்டிட அனுமதிக்கு விண்ணப்பித்தது, ஆனால் அது உள்ளூர் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. நிராகரிப்புக்குப் பிறகு, உங்கள் மேற்பார்வையாளர் உங்களை நகரத் திட்டமிடல் அலுவலகத்திற்குத் தொடர்ச்சியாகச் சில பேக்கேஜ்களை வழங்கச் சொல்கிறார். திடீரென்று சில வாரங்களுக்குப் பிறகு, கட்டிட அனுமதி அங்கீகரிக்கப்படுகிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: இது ஒரு சாத்தியமான லஞ்ச வழக்காகவும், அரசு அதிகாரிகளின் ஈடுபாட்டின் அடிப்படையில் வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்ட (FCPA) விதிகளின் சாத்தியமான மீறலாகவும் தோன்றுகிறது. உங்களுக்கு இன்னும் குறைகள் இருந்தால், உங்களால் முடிந்த அளவு விவரங்களுடன் சட்டம் மற்றும் இணக்கத் துறை அல்லது நெறிமுறைத் துறையின் அவசர உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். Gentherm சட்டம் மற்றும் இணக்கத் துறை இந்த வழக்கைப் பெற்று, அந்தப் பிரச்சினையை விசாரிக்கும்.

## வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள்

ஒரு தயாரிப்பு, சேவை, தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றொரு நாட்டில் உள்ள அல்லது மற்றொரு நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு அனுப்பப்படும்போது அல்லது கிடைக்கச் செய்யும்போது அது "ஏற்றுமதி" எனக் கருதப்படுகிறது. வாய்மொழி உட்பட எந்தவொரு வடிவத்திலும் தொழில்நுட்பம், தொழில்நுட்பத் தகவல் அல்லது மென்பொருள் குறியீட்டை ஒரு வெளிநாட்டவருடன் பகிர்ந்து கொள்வது போன்ற எளிமையான விஷயமாகவும் ஓர் ஏற்றுமதி இருக்கலாம். அமெரிக்கா மற்றும் பிற நாடுகள் சில நாடுகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடனான பொருட்களின் ஏற்றுமதி, சேவைகள் மற்றும் பிற செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைக் கொண்டுள்ளன. இந்தக் கட்டுப்பாடுகள் பின்வருவனவற்றிற்குப் பொருந்தும்:

- தடைசெய்யப்பட்ட நாடுகள் மற்றும் நபர்களுக்கு ஏற்றுமதி செய்தல்;
- தடைவிதிக்கப்பட்ட நாடுகள் அல்லது குறிப்பிட்ட தனிநபர்களுடனான முதலீடுகள் மற்றும் இதர செயல்பாடுகள்; மற்றும்
- உயர்தொழில்நுட்பம் அல்லது "இராணுவத் தரத்திலான" தொழில்நுட்பங்களின் ஏற்றுமதி.

எந்தவொரு ஏற்றுமதி நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்கு முன், பொருட்கள், தொழில்நுட்பம் அல்லது மென்பொருளுக்குப் பொருந்தக்கூடிய கட்டுப்பாடுகளையும், வழங்கப்பட வேண்டிய இடம் மற்றும் அதைப் பெறுபவர் ஆகிய இருவருக்கும் உள்ள தகுதியையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும். நிறுவனம் பொருந்தக்கூடிய அனைத்து உரிமங்களையும் அனுமதிகளையும் பெற வேண்டும், மேலும் இரு நாடுகளாலும் விதிக்கப்படக்கூடிய தேவையான வரிகளைச் செலுத்த வேண்டும்.

தடைசெய்யப்பட்ட நாடுகளின் பட்டியல் மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் எப்போதும் மாற்றத்திற்கு உட்பட்டவை, எனவே இவற்றுக்கு வழக்கமாக ஆய்வு தேவைப்படும். எனவே, நீங்கள் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், அனுமதிக்கப்பட்டவற்றில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதையும், ஏற்றுமதிக்கான தயாரிப்புகளை எவ்வாறு தகுந்த முறையில் அனுமதி பெறுவது என்பதையும் சரிபார்க்க நீங்கள் சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும். இதேபோல், தொழில் கூட்டாளர்களிடமிருந்து வழக்கத்திற்கு மாறான கோரிக்கைகள் அல்லது அர்ப்பணிப்பு கோரிக்கைகளை நீங்கள் பெற்றால், நிறுவனத்தின் சார்பாக எதற்கும் ஒப்புக்கொள்வதற்கு முன் அக்கோரிக்கையை ஆய்வு செய்ய சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்வது எப்போதும் சிறந்தது.

ஓர் அமெரிக்க நிறுவனமாக, Gentherm அமெரிக்காவிற்கு வெளியே உள்ள இடங்களிலும் அமெரிக்கச் சட்டங்களுக்கு இணங்கச் செயல்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதில் வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பான செயல்பாடுகள் அடங்கும், ஆனால் எழக்கூடிய பிற ஒழுங்குமுறை மற்றும் இணக்கம் சார்ந்த தலைப்புகளுக்கும் பொருந்தும். வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் தொடர்பான கூடுதல் தகவல்கள் அல்லது கேள்விகளுக்கு, சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ளவும்.



**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: உங்களுக்கு அறிமுகமில்லாத வாடிக்கையாளராக மாறக்கூடிய நபர் ஒருவர் அதிக எண்ணிக்கையில் தயாரிப்புகளை வாங்குவது குறித்து விசாரிக்க உங்களிடம் வருகிறார். நீங்கள் சிறிது ஆராய்ச்சி செய்து, அந்த வாடிக்கையாளராக மாறக்கூடிய நபர் இத்தகைய தயாரிப்புகளை வாங்கி, அவற்றை வர்த்தகத் தடை அல்லது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாடுகளுக்கு மறு-ஏற்றுமதி செய்வதற்குப் பெயர் பெற்ற ஒரு பிராந்தியத்தில் உள்ள கடை என்பதை அறிகிறீர்கள். உங்கள் வாடிக்கையாளராக மாறக்கூடிய நபர் கறுப்புப் பட்டியலில் இல்லை மற்றும் தடைகள் ஏதுமில்லாத ஒரு நாட்டில் இருக்கிறார், எனவே விற்பனையைத் தொடருவது சரியாக இருக்கும் என்று தோன்றுகிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: ஏற்றுமதித் தடைகளுக்கு உட்பட்டு நடப்பது என்பது உங்கள் தயாரிப்புகளை எங்கு விற்கிறீர்கள் என்பதில் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை, மாறாக மறு-ஏற்றுமதி அபாயத்தைப் புரிந்துகொள்வதையும் அல்லது அமெரிக்கச் சட்டத்துடன் ஒத்துப்போகாத இடங்களுக்குத் தயாரிப்புகளை அனுப்பும் திட்டங்களை அறிந்து கொள்வதையும் அடக்கியது. தயாரிப்புகள் தடைவிதிக்கப்பட்ட இடத்திற்கு மறு-ஏற்றுமதி செய்யப்படும் என்று உங்களுக்குத் தெரிந்தால் அல்லது நியாயமான சந்தேகம் இருந்தால், நீங்கள் குரல் கொடுக்க வேண்டிய கடமை உள்ளது. வாடிக்கையாளராக மாறக்கூடிய நபருடன் மேலும் தொடர்புகொள்வதற்கு முன் கூடுதல் தகவலுக்குச் சட்டம் மற்றும் இணக்கத் துறையின் ஒரு உறுப்பினரை அணுகவும்.

### போலிப் பாகங்கள்

நாங்கள் வாங்கும் மற்றும் பயன்படுத்தும் பாகங்கள் உண்மையானவை மற்றும் முறையானவை என்பதை உறுதிப்படுத்த நாங்கள் பெரும் முயற்சி எடுக்கிறோம். போலிப் பாகங்கள் Gentherm தரநிலைகளின்படி தயாரிக்கப்படுவதில்லை, மேலும் இவை பாகங்கள் செயலிழக்க அல்லது நாங்கள் தயாரிக்கும் தயாரிப்புகளில் ஒட்டுமொத்த சிஸ்டமும் பழுதடைவதற்கு வழிவகுக்கும். போலிப் பாகங்களால் ஏற்படும் தோல்விகள் Gentherm இன் நற்பெயரையும் நமது வாடிக்கையாளர்களின் பிராண்டுகளையும் பெரிதும் பாதிக்கலாம். பாகங்களைப் பெறும்போது, பேக்கேஜிங்கை ஆய்வு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், சந்தையில் உள்ள பிற பாகங்களுடன் ஒப்பிடத்தக்க விலையில் அவை உள்ளனவா என்பதைச் சரிபார்க்கவும் மற்றும் புகழ்பெற்றதாக அறியப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து வாங்கவும். Gentherm வாங்கிய அல்லது பயன்படுத்தும் பாகங்கள் போலியானவை என்று நீங்கள் சந்தேகித்தால் அல்லது சாத்தியமான போலி நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் உங்களிடம் இருந்தால், உங்கள் மேற்பார்வையாளரிடம் பேசவும் அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறையை அணுகவும்.

### ஏகபோக மறுப்பு மற்றும் நியாயமான போட்டி

நமது தொழில் அமெரிக்கக் கூட்டாட்சி ஏகபோக மறுப்பு மற்றும் போட்டிச் சட்டங்கள் மற்றும் Gentherm செயல்படும் பிற நாடுகளின் போட்டிச் சட்டங்களுக்கு உட்பட்டது. Gentherm தீவிரமாகப் போட்டியிட முனைந்தாலும், நாங்கள் எப்போதும் ஏகபோக மறுப்பு மற்றும் போட்டிச் சட்டங்களுக்கு இணங்க வேண்டும்.

ஏகபோக மறுப்பு மற்றும் போட்டிச் சட்டங்கள், நுகர்வோர் மற்றும் போட்டியாளர்களை முறையற்ற தொழில் நடைமுறைகளிலிருந்து பாதுகாக்கவும், நியாயமான போட்டியை ஊக்குவிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்கள், மற்றவற்றுடன்: விலைகளை நிர்ணயித்தல், ஒருங்கிணைத்தல் அல்லது கட்டுப்படுத்துதல் (விலையைப் பாதிக்கும் எந்தவொரு நிபந்தனைகளும் உட்பட) அல்லது உற்பத்தி தொடர்பான போட்டியாளர்களுடனான செயல்பாடுகளைத் தடை செய்கின்றன அல்லது கட்டுப்படுத்துகின்றன; வாடிக்கையாளர்கள், பகுதிகள் அல்லது சந்தைகளை ஒதுக்குதல் அல்லது பிரித்தல்; மற்றும் மற்றொரு தொழிலைப் புறக்கணிக்க ஒரு போட்டியாளருடன் உடன்படுதல் ஆகியவற்றைத் தடை செய்கின்றன.

இணக்கத்தை உறுதிப்படுத்த, போட்டியைத் தடுத்தல், விலையை நிர்ணயித்தல் அல்லது கட்டுப்படுத்துதல் அல்லது உற்பத்தி, அல்லது சந்தை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் போன்றதாகக் கருதப்படக்கூடிய செயல்பாடுகள் குறித்து நீங்கள் போட்டியாளர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடாது. போட்டிக்கு எதிரானது என்று கருதப்படக்கூடிய வகையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விலை நிர்ணயம், உற்பத்தி அல்லது விற்பனைத் தரவுகளைப் பரிமாறிக்கொள்ளும் வர்த்தகச் சங்கங்களில் பங்கேற்பதும் இதில் அடங்கும். ஒரு போட்டியாளர் அல்லது வர்த்தகச் சங்கம் இந்தச் செயல்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டால், ஊழியர்கள் நிறுவனத்தின் முதன்மைச் சட்ட ஆலோசகருக்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் சந்தைப் புள்ளிவிவரங்களைச் சட்டப்பூர்வமான மற்றும் நெறிமுறை சார்ந்த முறையில் சேகரிக்கலாம், ஆனால் நீங்கள் போட்டியாளர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.

நிறுவனம் தொழில் கூட்டாளர்களுடன் மேற்கொள்ளும் இடப்பாடுகளிலும் ஏகபோக மறுப்பு அபாயங்கள் ஏற்படலாம். நிறுவனத் தயாரிப்புகளை மறுவிற்பனை செய்வதில் கட்டுப்பாடுகளை விதித்தல், ஒரு தயாரிப்பின் விற்பனையுடன் இரண்டாவது தயாரிப்பை வாங்குவதைக் கட்டாயப்படுத்துதல் , அல்லது போட்டியைப் பாதிக்கக்கூடிய சூழல்களில் வெவ்வேறு வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு விலைகளை வசூலித்தல் ஆகியவை ஏகபோக மறுப்பு மற்றும் போட்டிச் சட்டங்களின் சாத்தியமான மீறல்கள் ஆகும்.

ஏகபோக மறுப்பு மற்றும் நியாயமான போட்டிச் சிக்கல்கள் தொடர்பான கூடுதல் தகவல்கள் அல்லது கேள்விகளுக்கு, சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ளவும்.

### பணச்சலவை தடுப்பு

பணச்சலவை என்பது சட்டவிரோதச் செயல்களின் மூலம் பெறப்பட்ட பணம் அல்லது சொத்தை, சட்டப்பூர்வமாகச் சம்பாதித்த பணமாகத் தோற்றமளிக்க மாற்றும் ஒரு செயல்முறையாகும். பணச்சலவை செய்யவோ, பணச்சலவைக்கு உதவும் செயல்களில் ஈடுபடவோ அல்லது பயங்கரவாதச் செயல்பாடுகள் அல்லது பிற குற்றச் செயல்களுக்கு நிதியுதவி செய்யவோ எந்தவொரு நிறுவனமோ அல்லது தனிநபரோ நமது நிறுவனத்தைப் பயன்படுத்துவதை Gentherm அனுமதிக்காது. தொழில் கூட்டாளர்களுடன் பணிபுரியும் போது சரியான முடிவெடுக்கும் திறனைப் பயன்படுத்தவும் மற்றும் உன்னிப்பாகக் கவனிக்கவும், குறிப்பாகப் பரிவர்த்தனையில் ரொக்கப் பணம் செலுத்துதல், அதிகப்படியான முன்பணம், கடல்கடந்து அல்லது மூன்றாம் தரப்பு கணக்குகளுக்குப் பணம் செலுத்துதல் ஆகியவை இருந்தால், அல்லது ஒரு தொழில் கூட்டாளர் தேவையான அடையாளத் தகவலை வழங்க மறுத்தால் அல்லது தடைசெய்யப்பட்ட அல்லது கண்காணிக்கப்படும் பட்டியலில் உள்ள ஒரு பெயரைப் போன்ற பெயரைப் பெற்றிருந்தால் கூடுதல் கவனத்துடன் இருக்கவும். ஒவ்வொரு பரிவர்த்தனைக்குப் பின்னணியிலும் யார் இருக்கிறார்கள் என்பதை எப்போதும் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் முறையான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள புகழ்பெற்ற மூன்றாம் தரப்பினருடன் மட்டுமே தொழிலை நடத்துங்கள். எந்தவொரு சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டையும் சட்டம் மற்றும் இணக்கத் துறை அல்லது நெறிமுறைத் துறையின் அவசர உதவி எண்ணில் புகாரளிப்பதன் மூலம், இத்தகைய நோக்கங்களுக்காக நமது செயல்பாடுகள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுங்கள்.




### சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் நிலைத்தன்மை

நாம் வாழும் மற்றும் பணிபுரியும் சூழலைப் பாதுகாக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம், இதில் நமது சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதும் அடங்கும். நாம் செயல்படும் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளின் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் சட்டத் தேவைகளையும் நாம் பூர்த்தி செய்ய வேண்டும். உங்கள் பணியிடத்தில் உள்ள கூட்டாட்சி, மாநில, மாகாண மற்றும் உள்ளூர் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு நீங்கள் இணங்க வேண்டும், அத்துடன் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கொள்கை மற்றும் பிற சுற்றுச்சூழல் தரநிலைகள் மற்றும் புது முயற்சிகளைப் பின்பற்ற வேண்டும்.

### அரசியல் நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகள்

நிறுவனத்தின் சார்பாக எந்தவொரு அரசு அதிகாரிக்கும் பணம், பொருட்கள், சேவைகள் அல்லது மதிப்புமிக்க எதையும் வழங்குவதை Gentherm தடை செய்கிறது. இயக்குநர் குழுவால் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்டாலன்றி, நிறுவனத்தின் சார்பாக எந்தவொரு அரசியல் வேட்பாளர், அரசியல் பதவியில் இருப்பவர் அல்லது அரசியல் கட்சி அதிகாரிகளுக்குப் பணம், பொருட்கள், சேவைகள் அல்லது மதிப்புமிக்க எதையும் வழங்குவதையும் Gentherm தடை செய்கிறது. நீங்கள் தனிப்பட்ட முறையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம்; இருப்பினும், அவ்வாறு செய்யும்போது, உங்கள் சொந்த ஆதாரங்களையே பயன்படுத்த வேண்டும், Gentherm இன் நிதி அல்லது ஆதாரங்களைப் பயன்படுத்தக்கூடாது. மேலும் நிறுவனத்தின் சார்பாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் மற்றும் அனைத்து அரசியல் ஈடுபாடுகளும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். நிறுவனத்தின் சார்பாக அரசியல் தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு தொடர்பு அல்லது ஆதரவும் ஈடுபாட்டிற்கு முன்னதாகவே சட்டம் மற்றும் இணக்கத் துறையிடம் தெரிவிக்கப்பட வேண்டும், மேலும் அத்தகைய தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகளை அங்கீகரிப்பதா இல்லையா என்பது குறித்து இயக்குநர் குழுவே தீர்மானிக்கும்.

**அரசு அதிகாரி என்பவர் யார்?**

அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களின் ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள், அமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் ஒழுங்குமுறை அதிகாரிகள் போன்ற பாரம்பரிய அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோர் அரசு அதிகாரிகளில் அடங்குவர்.



# 07

# வாடிக்கையாளர் மீது கவனம்செலுத்துவதில் உறுதிபூண்டுள்ளோம்

தனிப்பட்ட தரவு பாதுகாப்பு, நிறுவனத் தகவல் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய நமது நிறுவனத்தினுள் மற்றும் வெளியில் இருக்கும் வெளிப் பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாக்க நாங்கள் பல வழிகளில் செயல்படுகிறோம்.



### தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை

நிறுவனம் வைத்திருக்கும் அல்லது அணுகக்கூடிய தனிப்பட்ட மற்றும் பொதுமக்களுக்குத் தெரியாத நிறுவனத் தகவல்களின் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் கண்ணியத்தைப் பேணுவது Gentherm இல் மிக அவசியமானது. இத்தகைய தகவல்களைத் தவறாகக் கையாள்வது, நாம் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும் நமது ஊழியர்கள், தொழில் கூட்டாளர்கள் மற்றும் இதர மூன்றாம் தரப்பினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதையும், அத்துடன் Gentherm இன் தொழில் செயல்பாடுகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும் என்பதையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை என்பது வேகமாக மாறிவரும் ஒரு சட்டத் துறையாகும், மேலும் உலகின் பல நாடுகள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், பயன்படுத்துதல், சேமித்தல், வெளிப்படுத்துதல் மற்றும் சர்வதேச அளவில் பரிமாற்றம் செய்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் சட்டங்களைக் கொண்டுள்ளன. அத்தகைய சட்டங்களின் கீழ், தனிப்பட்ட தகவல் என்பது பொதுவாக ஒரு தனிநபரை அடையாளம் காணும் அல்லது அடையாளம் காண நியாயமான முறையில் பயன்படுத்தக்கூடிய தகவல்களை உள்ளடக்கும்; இதில் பெயர், முகவரி, தொடர்புத் தகவல் (மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண் உட்பட), பயோமெட்ரிக் தகவல், நிதித் தகவல் (வங்கிக் கணக்கு அல்லது பேமெண்ட் கார்டு தகவல் போன்றவை), ஆரோக்கியம் அல்லது மருத்துவத் தகவல், புகைப்படங்கள், தனிப்பட்ட சுயவிவரங்கள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள எண்கள் ஆகியவை அடங்கும்.

பொருந்தக்கூடிய அனைத்துத் தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமைச் சட்டங்களுக்கு (GDPR போன்றவை) இணங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். நமது ஊழியர்கள் மற்றும் தொழில் கூட்டாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் மற்றும் நமது சட்டப்பூர்வக் கடமைகளுக்கு இணங்கக்கூடிய நியாயமான மற்றும் தகுந்த தரவுப் பாதுகாப்பு மற்றும் தனியுரிமை நடைமுறைகளைச் செயல்படுத்துவதே நமது இலக்காகும். நிறுவனத்தின் ஊழியராக, நமது தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புத் தேவைகளுக்கு இணங்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. நிறுவனத்தில் உங்கள் வேலைவாய்ப்பின் மூலம் நீங்கள் பெறும் அல்லது அணுகக்கூடிய அனைத்துத் தனிப்பட்ட தகவல்களையும் நீங்கள் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். இதில் நிறுவனத்தின் ஊழியர்கள், தொழில் கூட்டாளர்கள் மற்றும் நிறுவனம் தொழில் செய்யும் இதர மூன்றாம் தரப்பினரின் தனிப்பட்ட தகவல்கள் அடங்கும். இருப்பினும், இந்தக் கடமையானது NLRA இன் கீழ் உள்ள செயல்பாடுகள் தொடர்பாகச் சக ஊழியர்களின் பெயர்கள், தொடர்புத் தகவல், உங்கள் ஊதியம் அல்லது உங்கள் பணி நிலைமைகள் குறித்த தகவல்களை வழங்குவதிலிருந்து உங்களைக் கட்டுப்படுத்தாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். தரவுப் பாதுகாப்பு மற்றும் தரவுத் தனியுரிமை குறித்த கூடுதல் தகவலுக்கு, உங்கள் நிறுவன மனிதவளக் குழு, சட்டம் மற்றும் இணக்கத் துறை அல்லது இங்கே உள்ள ஆதரவுக் கொள்கைகளைத் தொடர்பு கொள்ளவும்.

**நீங்கள் என்ன செய்வீர்கள்?**

கேள்வி: உங்கள் குழுவில் முன்பு பணிபுரிந்த ஒருவரின் தொடர்புத் தகவலைக் கேட்டு வெளியூர் நிறுவனம் ஒன்றிடமிருந்து உங்களுக்கு மின்னஞ்சல் வருகிறது. உங்களிடம் அந்த நபரின் தனிப்பட்ட மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி எண் உள்ளது. நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: Gentherm இல், தனிப்பட்ட மற்றும் ரகசியத் தகவல்களைப் பாதுகாப்பது என்பது ஒருவர் நமது குழுவை விட்டு வெளியேறியவுடன் முடிந்துவிடும் ஒன்றல்ல. அந்தத் தகவலைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்று நீங்கள் அந்த வெளி நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும். ஓர் அரசு நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவது போன்ற சட்டப்பூர்வ உரிமை தமக்கு இருப்பதாகவோ அல்லது ஏதேனும் சட்டப்பூர்வ நடவடிக்கையாகவோ அந்த நபர் கூறினால், கூடுதல் வழிகாட்டுதலுக்கு மனிதவளத் துறை அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறையை அணுகவும்.

## நிறுவனச் சொத்துகளின் பாதுகாப்பு மற்றும் முறையான பயன்பாடு; நிறுவன வாய்ப்புகள்

நாம் உருவாக்கிப் பராமரிக்கும் சொத்துகளின் பாதுகாப்பு மற்றும் முறையான பயன்பாட்டையே நமது தொழில் சார்ந்துள்ளது. Gentherm இல் உங்கள் வேலைவாய்ப்பின் எல்லைக்குள் நீங்கள் உருவாக்கும் அனைத்தும் Gentherm இன் அறிவுசார் சொத்தாகக் கருதப்படுகிறது. பொருள் சார்ந்த சொத்துகள், அறிவுசார் சொத்துரிமை மற்றும் ரகசியத் தகவல்கள் போன்ற தொட்டு உணரமுடியாத சொத்துகள் உட்பட நிறுவனத்தின் அனைத்துச் சொத்துகளின் மதிப்பைப் பாதுகாக்க Gentherm இன் நிறுவப்பட்ட நடைமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்களை நீங்கள் பின்பற்ற வேண்டும். மற்றவர்களின் அறிவுசார் சொத்துரிமைகளை மதிப்பதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உதாரணமாக, அத்தகைய செயல்பாட்டிற்கு Gentherm இடம் வெளிப்படையான உரிமம் இருந்தாலன்றி, உங்கள் பணிப் பொறுப்புகளை நிறைவேற்றும் போதோ அல்லது Gentherm இன் சாதனங்கள் அல்லது கணினி அமைப்புகளிலோ பாதுகாக்கப்பட்ட பொருட்களை (எ.கா. மூன்றாம் தரப்பு அறிவுசார் சொத்துரிமை அல்லது உங்கள் சொந்த அறிவுசார் சொத்துரிமையின் கீழ் உள்ள பொருட்கள்) நீங்கள் அறிமுகப்படுத்தவோ, நகலெடுக்கவோ, மறு உருவாக்கம் செய்யவோ, கடத்தவோ அல்லது வேறு எந்த வகையிலும் பயன்படுத்தவோ கூடாது; இதில் படைப்புகள், எழுத்துகள், கலைப்படைப்புகள், இசை, வீடியோக்கள், புகைப்படங்கள், திரைப்படக் காட்சிகள், கண்டுபிடிப்புகள், நடைமுறை அறிவு, தொழில் ரகசியங்கள், மென்பொருள் போன்றவை அடங்கும்.

Gentherm இன் வேலையை விட்டு வெளியேறிய பிறகும், நீங்கள் எப்போதும் ரகசியத் தகவல்களைத் (அது Gentherm இன் தகவலாக இருந்தாலும் சரி அல்லது மற்றொரு தரப்பினருடையதாக இருந்தாலும் சரி) தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் மற்றும் Gentherm இன் வெளிப்படையான எழுத்துப்பூர்வ அங்கீகாரமின்றி அதைப் பயன்படுத்தவோ அல்லது வெளிப்படுத்தவோ கூடாது. மேலும், சிறப்புரிமை பெற்ற அல்லது ரகசியத் தகவல்களைப் பயன்படுத்துமாறு அல்லது வெளிப்படுத்துமாறு யாரையும் நீங்கள் கோரவோ அல்லது ஊக்குவிக்கவோ கூடாது; அத்தகைய தகவல்களை Gentherm நிறுவனத்திற்குள் கொண்டுவரவோ அல்லது Gentherm இன் அமைப்புகள் மற்றும் சாதனங்களில் பதிவேற்றவோ கூடாது, அந்தத் தகவல்களின் உரிமையாளரால் அதற்குரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே தவிர, இந்தத் தடையை மீறி ஏதேனும் தகவல் வெளிப்படுத்தப்படுவதை நீங்கள் அறிய நேரிட்டால், அக்காரியத்தை உங்கள் மேற்பார்வையாளரிடம் தெரிவிக்க வேண்டும் அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்தக் கடமையானது NLRA இன் கீழ் உள்ள செயல்பாடுகள் தொடர்பாகச் சக ஊழியர்களின் பெயர்கள், தொடர்புத் தகவல், உங்கள் ஊதியம் அல்லது உங்கள் பணி நிலைமைகள் குறித்த தகவல்களை வழங்குவதிலிருந்து உங்களைக் கட்டுப்படுத்தாது.

திருட்டு, கவனக்குறைவு மற்றும் வீணாக்குதல் ஆகியவை நமது நிதி மற்றும் செயல்பாட்டுத் திறனில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. Gentherm ஊழியர்களின் தனியுரிமையை மதித்தாலும், உங்கள் மேஜை, பணி அறை, அல்லது கணினிச் சாதனங்கள் அல்லது தொலைபேசி உபகரணங்களின் பயன்பாடு தனிப்பட்டவை அல்லது ரகசியமானவை என்று நீங்கள் கருதக்கூடாது. உள்ளூர்ச் சட்டங்களுக்கு உட்பட்டு மற்றும் சட்டம் மற்றும் இணக்கத் துறையின் வழிகாட்டுதலின் கீழ், நிறுவனத்தின் மின்னணு மற்றும் நெட்வொர்க் வளங்களில் இருந்து வரும் மற்றும் செல்லும் தகவல்தொடர்புகள், அத்துடன் கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட்ட தகவல்தொடர்புகள் உட்பட அனைத்து நிறுவனச் சாதனத் தகவல்களையும் Gentherm தேடலாம் மற்றும் ஆய்வு செய்யலாம்.

கூடுதலாக, நிறுவனத்திற்குச் சொந்தமான அல்லது நிறுவனத்தில் உங்கள் வேலைவாய்ப்பு அல்லது இயக்குநர் பதவியின் போது நீங்கள் கண்டறியும் உண்மையான அல்லது சாத்தியமான வாய்ப்புகளை, நிறுவனத்தின் முன்-அனுமதியைப் பெறாமல் நீங்கள் தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட ஆதாயத்திற்காகவோ அல்லது நிறுவனத்துடன் போட்டியிடவோ அல்லது போட்டியிடத் தயாராகவோ நீங்கள் நிறுவனத்தின் சொத்துகள், தகவல்கள் (வாடிக்கையாளர் பட்டியல்கள், வாடிக்கையாளர் தகவல்கள் மற்றும் பிற ரகசிய அல்லது உரிமையாளர் சார்ந்த தகவல்கள் உட்பட ஆனால் இவை மட்டுமே அல்ல) அல்லது பதவியைப் பயன்படுத்தக்கூடாது.

நமது ஊழியர்கள் அனைவரும் தங்கள் சமூகங்களில் ஈடுபட்டு, சமூகத்திற்குப் பங்களிக்குமாறு நாங்கள் ஊக்கப்படுத்துகிறோம். இருந்தபோதிலும், உங்கள் மேற்பார்வையாளர் அல்லது இதர தகுந்த பணியாளர்களின் அனுமதியின்றி ஒரு தொண்டு நிறுவனத்திற்கு ஆதரவளிக்க நீங்கள் ஒருபோதும் நிறுவனத்தின் வளங்களையோ அல்லது நிறுவனத்தின் நேரத்தையோ பயன்படுத்தக்கூடாது.

### ரகசியத்தன்மையுள்ள மற்றும் உரிமைத்துவமுள்ளோரின் தகவல்கள்

ரகசியத்தன்மையுள்ள மற்றும் உரிமைத்துவமுள்ளோரின் தகவல்கள் என்பதில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட மூன்றாம் தரப்பு தகவல்கள் உட்பட அனைத்துப் பொதுமக்களுக்குத் தெரியாத தகவல்களும் அடங்கும். NLRA க்கு ஏற்ப, உங்கள் ஊதியம், சக ஊழியர்களின் பெயர்கள் மற்றும் தொடர்புத் தகவல் மற்றும் உங்கள் பணி நிலைமைகள் தொடர்பான தகவல்கள் ரகசியத்தன்மையுள்ள மற்றும் உரிமைத்துவமுள்ளோரின் தகவல்களில் அடங்காது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். உரிமைத்துவமுள்ளோரின் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டால், அவை போட்டியாளர்களுக்குப் பயனுள்ளதாக அமையலாம் அல்லது நிறுவனத்திற்குத் தீங்கு விளைவிக்கலாம். ரகசியத்தன்மையுள்ள மற்றும் உரிமைத்துவமுள்ளோரின் தகவல்கள் நமது நிறுவனத்தின் ஒரு முக்கியச் சொத்தாகும். ஒப்பந்தத்தின் மூலம் வெளிப்படுத்த வெளிப்படையான அனுமதி வழங்கப்பட்டால் அல்லது சட்டத்தால் கோரப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர (ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரால் தீர்மானிக்கப்பட்டு உங்களுக்குத் தெரிவிக்கப்படும்), நிறுவனம் உங்களிடம் ஒப்படைத்த அல்லது நமது தொழில் கூட்டாளர்களால் Gentherm உடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட ரகசியத்தன்மையுள்ள அல்லது உரிமைத்துவமுள்ளோரின் தகவல்களின் ரகசியத்தை எப்போதும் பேணுங்கள். ரகசியத்தன்மையுள்ள அல்லது உரிமைத்துவமுள்ளோரின் தகவலையும் அனுமதியின்றி வெளிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது, மேலும் இது உங்களுக்கும் நிறுவனத்திற்கும் சட்டப்பூர்வப் பொறுப்பை ஏற்படுத்தக்கூடும்.

ரகசியத் தகவல்களைப் பாதுகாக்கவும், அத்தகவல்களைத் தங்கள் கடமைகளைச் செய்யத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமுள்ள ஊழியர்களைத் தவிர, நிறுவனத்தினுள் மற்றவர்களுக்கு அவை தெரிவிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுங்கள். பொது இடங்களிலோ அல்லது மற்றவர்கள் இருக்கும் இடங்களிலோ ரகசியத் தகவல்களைப் பற்றி விவாதிக்காமல் அல்லது ஆய்வு செய்யாமல் இருப்பது தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அடங்கும்.

Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுந்த ரகசியக் காப்பு ஒப்பந்தத்தின் கீழ் அந்தத் தகவல் வராத வரை, எந்தவொரு போட்டியாளரின் தொழில் ரகசியங்களையோ அல்லது ரகசியத் தகவல்களையோ தேடவோ, பயன்படுத்தவோ, ஏற்கவோ அல்லது நிறுவனத்தின் எந்தவொரு மின்னணு ஆதாரத்திலும் பதிவேற்றவோ கூடாது. கூடுதலாக, ஊடகங்கள், சந்தை ஆய்வாளர்கள் அல்லது முதலீட்டாளர்களைச் சேர்ந்த மூன்றாம் தரப்பினர் நிறுவனம் தொடர்பான தகவல்களை உங்களிடம் கேட்கலாம். உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டாலன்றி மற்றும் தேவைப்பட்டால் Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தகுந்த ரகசியக் காப்பு ஒப்பந்தம் இருந்தாலன்றி, நிறுவனத்திற்கு வெளியே உள்ள எவருடனும் ரகசியத்தன்மையுள்ள அல்லது உரிமைத்துவமுள்ளோரின் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளாதீர்கள். நிறுவனத்தின் சார்பாகக் கேட்கப்படும் விசாரணைகளுக்கான அனைத்துப் பதில்களும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளர்களால் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

### கணக்குப் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் பொது அறிக்கைகளின் துல்லியம்

நமது கணக்குப் புத்தகங்கள், பதிவுகள் மற்றும் பொது அறிக்கைகளின் துல்லியம் என்பது, சட்டப்பூர்வ மற்றும் ஒழுங்குமுறைக் கடமைகளை நிறைவேற்றும் Gentherm இன் திறனுக்கு அவசியமானது. நமது பதிவுகள் நமது வருவாய் அறிக்கைகள், நிதி அறிக்கைகள் மற்றும் பிற வெளிப்படுத்தல்களுக்கு அடிப்படையாக அமைகின்றன, மேலும் அவை நமது வணிக முடிவெடுத்தல் மற்றும் மூலோபாயத் திட்டமிடலுக்கும் வழிகாட்டுகின்றன. Gentherm தனது அறிக்கைகள் மற்றும் அமெரிக்கப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்திடம் (Securities and Exchange Commission - "SEC") தாக்கல் செய்யப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் இதர பொதுத் தொடர்புகளில் முழுமையான, நியாயமான, துல்லியமான, சரியான நேரத்திலான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய வெளிப்படுத்தல்களை வழங்க வேண்டும். அனைத்து ஊழியர்களும் அனைத்து வணிகப் பரிவர்த்தனைகளையும் சரியாகத் தெரிவித்தல், துல்லியமான பதிவுகளைப் பராமரித்தல் ஆகியவை நமக்குத் தேவைப்படுகிறது. நிறுவனம் துல்லியமான பதிவுகளைப் பராமரிப்பதை உறுதி செய்ய, பொருந்தக்கூடிய இடங்களில், நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- அனைத்துச் சொத்துகள், பொறுப்புகள், வருவாய்கள், செலவுகள் மற்றும் வணிகப் பரிவர்த்தனைகளை முழுமையாகவும், துல்லியமாகவும், சரியான காலக்கட்டத்திலும் மற்றும் நேரம் தவறாமலும் பதிவு செய்ய வேண்டும்;
- பதிவுகள் மற்றும் கணக்குகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் நமது நிறுவனத்தினுள் இருக்கும் கட்டுப்பாட்டு அமைப்புடன் ஒத்துப்போவதை உறுதி செய்ய வேண்டும்;
- ரகசியமான அல்லது பதிவு செய்யப்படாத ரொக்க நிதிகள் அல்லது இதர சொத்துகள் அல்லது கடப்பாடுகளை ஒருபோதும் உருவாக்கக்கூடாது; மற்றும்
- பதிவுகளை உருவாக்கும்போது தகுந்த மற்றும் துல்லியமான சொற்களைப் பயன்படுத்தவும் மற்றும் மிகைப்படுத்துவதைத் தவிர்க்கவும்.

கூடுதலாக, நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் தணிக்கை, ஆய்வு அல்லது பரிசோதனை தொடர்பாகவோ அல்லது SEC இடம் ஏதேனும் ஆவணம் அல்லது அறிக்கையைத் தயார் செய்தல் அல்லது தாக்கல் செய்தல் தொடர்பாகவோ ஒரு கணக்காளரிடம் நீங்கள் தெரிந்தே தவறான அல்லது தவறாக வழிநடத்தும் அறிக்கையை அளிக்கக்கூடாது.

நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள், பதிவுகள் அல்லது பொது அறிக்கைகள் ஏதேனும் துல்லியமற்றவை என்று நீங்கள் சந்தேகத்தால், அது குறித்து உங்கள் மேற்பார்வையாளர், Gentherm கணக்கியல் அல்லது நிறுவனத்தினுள் இருக்கும் தணிக்கைக் குழுவின் உறுப்பினர் அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறையின் உறுப்பினரிடம் விவாதிக்க வேண்டும். நீங்கள் நெறிமுறைத் துறையின் அவசர உதவி எண்ணையும் தொடர்பு கொள்ளலாம், இங்கே கிளிக் செய்யவும்.

#### நீங்கள் என்ன செய்வீர்கள்?

கேள்வி: கடந்த காலாண்டின் கணக்கியல் பதிவுகளில் ஒரு சிறிய பிழையைக் கண்டறிந்ததாக, ஆனால் தகவல் இறுதி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் வரை அவர்கள் அதைக் கவனிக்கவில்லை என்று உங்கள் சக ஊழியர் ஒருவர் குறிப்பிடுகிறார். அது மிகச் சிறிய தொகை என்பதால் இது ஒரு பெரிய விஷயமல்ல என்றும், இந்த காலாண்டின் தொடக்கத்தில் அவர்கள் திருத்தம் செய்துவிட்டதால் யாரும் இதைக் கவனிக்க மாட்டார்கள் என்றும் உங்கள் சக ஊழியர் கூறுகிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: பொதுவில் வர்த்தகம் செய்யப்படும் ஒரு நிறுவனம் என்ற முறையில், நமது நிதித் தரவைத் துல்லியமாகப் புகாரளிக்க வேண்டிய சட்டப்பூர்வ கடமை எங்களுக்கு உள்ளது. பிழைகள் கண்டறியப்பட்டால், தரவு பொதுவில் வெளியிடப்பட்ட பின்னரும் கூட, தகுந்த அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்க ஒரு கடுமையான செயல்முறை உள்ளது. கூடுதல் ஆதரவிற்காக உங்கள் மேற்பார்வையாளர் அல்லது Gentherm இன் தலைமைக் கணக்கியல் அதிகாரியை நீங்கள் அணுக வேண்டும்.



### பொறுப்பான தகவல்தொடர்புகள்

நமது ஊழியர்கள் மற்றும் இயக்குநர்களிடமிருந்து Gentherm பற்றிய அனைத்துத் தகவல்தொடர்புகளும் நிறுவனத்தின் நற்பெயர் மற்றும் பிராண்டைப் பிரதிபலிக்கின்றன. நிறுவனத்தின் சார்பாகக் கேட்கப்படும் விசாரணைகளுக்கான அனைத்துப் பதில்களும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளர்களால் மட்டுமே வழங்கப்பட வேண்டும், மேலும் நிறுவனத்தின் சார்பாகப் பேச உங்களுக்கு அனுமதி இருந்தாலன்றி, கருத்துகளை உங்களுடையதாகவே நீங்கள் அடையாளப்படுத்த வேண்டும்.

வேலைக்கு வெளியேயும் கூட, உங்கள் ஆன்லைன் செயல்பாடுகள் நிறுவனத்திற்குத் தீங்கு விளைவிப்பதாக அமையலாம். சட்டவிரோத உள்ளடக்கம் அல்லது மற்றவர்களைக் கொடுமைப்படுத்துவது, அச்சுறுத்துவது, சட்டவிரோதமாகத் துன்புறுத்துவது அல்லது சட்டவிரோதமாகப் பாகுபாடு காட்டுவது போன்ற எதையும் பதிவிடாமல் இருக்க நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். Gentherm இன் சமூக ஊடகக் கொள்கை (ஊழியர்களுக்கு நிறுவனத்தினுள் கிடைக்கக்கூடியது) இந்தத் தலைப்பைப் பற்றி விரிவாகக் கூறுகிறது, இது அனைத்து Gentherm ஊழியர்களுக்கும் கிடைக்கிறது.

பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, SEC கோப்புத் தாக்கல்கள் மற்றும் இதர பங்குதாரர் தகவல்தொடர்புகளில் தகவல்களைச் சரியான நேரத்தில், சீரான மற்றும் துல்லியமான முறையில் பரப்புவதை உறுதி செய்ய Gentherm அர்ப்பணிப்புடன் உள்ளது. பொருளீட்டுதல் சார்ந்த பொதுமக்களுக்குத் தெரியாத தகவல்களை வெளியிடுதல் மற்றும் பயன்படுத்துதல், அத்துடன் அத்தகைய விஷயங்கள் குறித்து நிறுவனத்தின் சார்பாகப் பேச அனுமதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நபர்களை ஒழுங்குபடுத்தும் நடைமுறைகளை நாங்கள் நிறுவியுள்ளோம். நமது வெளிப்படுத்துதல் நடைமுறைகள் குறித்த கூடுதல் தகவலுக்கு, நமது நியாயமான வெளிப்படுத்துதல் கொள்கையைப் பார்க்கவும் (இங்கே).

### சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையில் கண்ணியம்

நமது உயர்தர தயாரிப்புகள் மற்றும் சேவைகள், நமது மதிப்பீடுகள் மற்றும் நேர்மையுடன் இணைந்து, சந்தையில் நமக்கான போட்டியில் சாதகத்தன்மை கிடைத்துள்ளது—வெற்றி பெறுவதற்காக நாம் மற்றவர்களை இழிவுபடுத்துவதில்லை. உள்ளூர் சட்டத்தால்
போட்டித் தயாரிப்புகள் அல்லது சேவைகள் பற்றிய அறிக்கைகள் அனுமதிக்கப்படும் இடங்களில், போட்டியாளர்களின் தயாரிப்புகளை நமது தயாரிப்புகளுடன் ஒப்பிட்டு நீங்கள் கூறும் எந்தவொரு வாதமும் தகுந்த சோதனைகள் மூலம் முறையாக நிரூபிக்கப்படுவதையும், தகுந்த நபர்களால் சரிபார்க்கப்படுவதையும் உறுதிசெய்துகொள்ளுங்கள். நமது போட்டியாளர்களை ஒருபோதும் நியாயமற்ற முறையில் விமர்சிக்காதீர்கள் அல்லது தகாத முறையில் அவர்களின் தயாரிப்புகளின் நற்பெயரைக் கெடுக்க முயற்சிக்காதீர்கள்.

கூடுதலாக, நமது போட்டியாளர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க நாம் சட்டப்பூர்வமான, நேர்மையான வழிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். போட்டித் தகவல்களைச் சேகரிக்க நீங்கள் ஒரு Gentherm ஊழியர் என்ற உங்கள் அடையாளத்தை ஒருபோதும் மறைக்காதீர்கள் அல்லது அத்தகைய தகவல்களை வெளிப்படுத்துமாறு வேறு எவரையும் வற்புறுத்தவோ அல்லது கட்டாயப்படுத்தவோ கூடாது. வெளிப்படுத்தக்கூடாத போட்டித் தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டால், அந்தத் தகவலை ஏற்க மறுத்துவிடுங்கள் மற்றும் உங்கள் மேற்பார்வையாளருக்குத் தெரிவிக்கவும் அல்லது சட்டம் மற்றும் இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ளவும்.

### பதிவுகள் மேலாண்மை

நமது தொழில் செயல்பாடுகளின் போது, நிறுவனம் பல ஆவணங்களை உருவாக்குகிறது மற்றும் பெறுகிறது. பதிவுகளைப் பாதுகாப்பது தொடர்பான அனைத்துப் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க நிறுவனம் அர்ப்பணிப்புடன் உள்ளது. நிறுவனத்தின் வசம் உள்ள அனைத்துப் பதிவுகளையும் முறையான மற்றும் வழக்கமான அடிப்படையில் அடையாளம் காணுதல், பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் தேவைக்கேற்ப அழித்தல் அல்லது வைத்திருப்பது நிறுவனத்தின் கொள்கையாகும்.

நீதிமன்ற அழைப்பாணை, நிலுவையில் உள்ள அல்லது எதிர்பார்க்கப்படும் சட்ட நடவடிக்கை, கோரிக்கை அல்லது அரசாங்க விசாரணை பற்றி அறியும் ஒரு நபர் உடனடியாக Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரைத் தொடர்புகொள்ள வேண்டும். எவ்வாறு தொடர வேண்டும் என்பது குறித்து Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரால் அறிவுறுத்தப்படும் வரை, அந்த நபர் நீதிமன்ற அழைப்பாணைக்குத் தேவையான அல்லது கோரிக்கை, சட்ட நடவடிக்கை அல்லது விசாரணை தொடர்பான அனைத்துப் பதிவுகளையும் வைத்திருக்க வேண்டும் மற்றும் பாதுகாக்க வேண்டும். அந்த நபர் மின்னஞ்சல்கள் மற்றும் குரல் அஞ்சல் செய்திகள் போன்ற அனைத்துத் தொடர்புடைய பதிவுகளையும் அழிக்கக்கூடாது, மாறாக அவற்றை வைத்திருக்க வேண்டும் மற்றும் பாதுகாக்க வேண்டும். அத்தகைய பதிவுகளை அழிப்பது, அது கவனக்குறைவாக நடந்தாலும் கூட, நிறுவனத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். ஒரு குறிப்பிட்ட பதிவு நிலுவையில் உள்ள அல்லது எதிர்பார்க்கப்படும் தகராறு, கோரிக்கை, விசாரணை அல்லது சட்ட நடவடிக்கை தொடர்பானதுதானா அல்லது நீதிமன்ற அழைப்பாணைக்குத் தேவையானதுதானா என்பது குறித்த கேள்விகள் அல்லது குறிப்பிட்ட வகை பதிவுகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த கேள்விகளைச் சட்டம் மற்றும் இணக்கத் துறையின் ஒரு உறுப்பினரிடம் கேட்க வேண்டும்.



# 08

# சரியான காரியத்தைச் சரியான வழியில் செய்வதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம்

இந்தக் கோட்பாடை ஆய்வு செய்து, நமது தொழிலை மிக உயர்ந்த அளவிலான நன்னெறி மற்றும் கண்ணியத்துடன் நடத்துவதை உறுதி செய்ய அர்ப்பணிப்புடன் இருக்கும் ஒவ்வொரு நபரின் பங்களிப்பையும் நாங்கள் பாராட்டுகிறோம். இந்தக் கோட்பாடில் நிறுவப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன், காரியங்களைச் சரியான வழியில் செய்யும் கலாச்சாரத்தை உருவாக்கவும் பராமரிக்கவும் உங்கள் ஒவ்வொருவரின் உதவியையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.





09

# கொள்கை இணைப்புகள் மற்றும் பயனுள்ள வளங்கள்

- **உலகளாவிய மனித உரிமைகள் கொள்கை –** https://gentherm.gcs-web.com/policies-reports
- **Gentherm நன்னெறித் துறையின் உதவி எண் –** www.gentherm.ethicspoint.com
- **சுற்றுச்சூழல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக் கொள்கை –** https://gentherm.gcs-web.com/policies-reports
- **உலகளாவிய தரவுத் தனியுரிமைக் கொள்கை –** https://gentherm.com/wp-content/uploads/Privacy-Policy.pdf
- **Gentherm கார்ப்பரேட் ஆளுகைக் கொள்கை & அறிக்கைகள் –** https://ir.gentherm.com/corporate-governance/documents-charters
- **Gentherm தொடர்புடைய நபர்களின் பரிவர்த்தனைக் கொள்கை –** https://gentherm.gcs-web.com/policies-reports
- **பங்கு வர்த்தகக் கொள்கை –** https://gentherm.gcs-web.com/policies-reports
- **லஞ்ச ஒழிப்புக் கொள்கை –** https://gentherm.gcs-web.com/policies-reports
- **Gentherm நிலைத்தன்மை –** www.gentherm.com/en/esg
- **Gentherm நியாயமான வெளிப்படுத்துதல் கொள்கை –** https://gentherm.gcs-web.com/policies-reports

குறிப்பு: நிறுவனத்தினுள் இருக்கும் ஊழியர் கொள்கைகளைக் கண்டறிய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து இவர்களைத் தொடர்பு கொள்ளவும்:

- **சமூக ஊடகக் கொள்கை** – சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்பு குழு
- **உலகளாவிய பயணம், பரிசுகள் மற்றும் கேளிக்கை மற்றும் செலவின அறிக்கைக் கொள்கை** – மனிதவளத் துறை அல்லது இணக்கத் துறை (Compliance)
- **மற்ற அனைத்து நிறுவனத்தினுள் இருக்கும் கொள்கைகள்** – உங்கள் மேற்பார்வையாளர் அல்லது மனிதவளக் குழுவின் ஒரு உறுப்பினரைத் தொடர்பு கொள்ளவும்

# பிற்சேர்க்கை

### நடத்தை மற்றும் நன்னெறிக்கான கோட்பாடின் தளர்வு

நிறுவனத்தின் ஒரு நிர்வாக அதிகாரி அல்லது இயக்குநருக்காக இந்தக் கோட்பாடில் ஏதேனும் தளர்வு அளிக்கப்பட்டால், அது மன்றத்தினால் அல்லது மன்றம் நியமித்த ஒரு குழுவால் மட்டுமே செய்யப்பட முடியும். மேலும் அத்தகைய நபர்களுக்கான இந்தக் கோட்பாடின் எந்தவொரு தளர்வும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி பொதுவில் வெளிப்படுத்தப்படும். நிறுவனத்தின் இதர ஊழியர்களுக்கு இந்தக் கோட்பாடின் நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு Gentherm இன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் முதன்மைச் சட்ட ஆலோசகர் ஆகியோருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. இந்தக் கோட்பாடில் உள்ள கொள்கைகளில் ஏதேனும் ஒரு விலக்கு உங்கள் விஷயத்தில் தகுந்த ஒன்று என்று நீங்கள் நம்பினால், தளர்வைக் கோர நீங்கள் Gentherm இன் முதன்மைச் சட்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

### இந்தக் கோட்பாடுக்கு இணங்கத் தவறுதல்

இந்தக் கோட்பாடுக்கு இணங்கத் தவறுவது, பொருந்தக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டு, வேலைநீக்கம் உட்பட பல ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும். இந்தக் கோட்பாடின் சில குறிப்பிட்ட மீறல்களுக்கு, விசாரணை அல்லது சட்ட நடவடிக்கைகளுக்காக நிறுவனம் அந்த விவகாரத்தைச் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு மாற்ற வேண்டியிருக்கலாம். இந்தக் கோட்பாடை மீறும் எந்தவொரு நடத்தையையும் வழிநடத்தும், அங்கீகரிக்கும் அல்லது அலட்சியப்படுத்தும் எந்தவொரு மேற்பார்வையாளர் அல்லது நிர்வாக உறுப்பினரும் அல்லது அத்தகைய நடத்தையை அறிந்திருந்தும் உடனடியாகப் புகாரளிக்காதவரும், பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

### குறிப்பிட்ட நபர்களுக்குப் பொருந்தும் விதம்

பொருந்தக்கூடிய அமெரிக்கப் பங்குகள் தொடர்பான சட்டங்களின் தெளிவிற்காக, இந்தக் கோட்பாடு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, முதன்மை நிதி அதிகாரி, கட்டுப்பாட்டாளர், முதன்மைக் கணக்கியல் அதிகாரி மற்றும் இதே போன்ற பணிகளைச் செய்யும் பிற நபர்களுக்கு வெளிப்படையாகப் பொருந்தும்.

### நிறுவனத்தின் பிற வழிகாட்டுதல்கள்

இந்தக் கோட்பாடு நிறுவனத்தின் சில கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை விவரிப்பதற்காக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கோட்பாடு என்பது நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் முழுமையான பட்டியல் அல்ல. உங்கள் பணி தொடர்பான நிறுவனத்தின் அனைத்துக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனத்தின் எந்தவொரு கொள்கை மற்றும் வழிகாட்டுதலை மீறுவதும் வேலைநீக்கம் அல்லது சேவையை நிறுத்துவது வரையிலான ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

### உரிமைகள் எதுவும் உருவாக்கப்படவில்லை

இந்தக் கோட்பாடு வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது வாக்குறுதி அளிக்கவோ உத்தேசிக்கப்படவில்லை. மேலும் எந்தவொரு ஊழியர், வாடிக்கையாளர், வழங்குநர், போட்டியாளர், பங்குதாரர் அல்லது வேறு எந்த நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் எந்தக் கடமைகளையோ அல்லது உரிமைகளையோ உருவாக்கவோ அல்லது எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்குச் சாதகமான சட்ட நடவடிக்கைக்கு வழிவகுக்கவோ நோக்கம் கொண்டவை அல்ல.

### இந்த கோட்பாடில் மாற்றங்கள்

எந்த நேரத்திலும், எந்தக் காரணத்திற்காகவும் இந்தக் கோட்பாடைத் திருத்த, மாற்ற அல்லது ரத்து செய்ய நிறுவனத்திற்கு உரிமை உண்டு. இந்தக் கோட்பாடின் மிகச் சமீபத்திய பதிப்பை நிறுவனத்தின் இண்ட்ராநெட்டிலும் நிறுவனத்தின் இணையதளத்திலும் காணலாம்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்: